# வேதாகம சபை

## THE CHURCH OF THE BIBLE

ஜே.சி. சோட்

J.C. CHOATE

*Published by*

**World Literature Publications**

Madurai, India.

**The Church of the Bible :** 2nd Printing, Sep - 2017

Copyright @ J.C. School of Evangelism (Madurai)

Author : **J.C.CHOATE** (USA)

Layout, Translation & Proof Reading

Kingsly Rajah, Antony Rajah

Published & Printed For

**CHOATE BIBLE CORRES. COURSE INSTITUTE**

by

**P.C. PHILEMON RAJAH**

(Director, J.C. School of Evangelism)

பிரதிகள் கிடைக்கும் இடம் :

**கிருபையுள்ள வார்த்தை**

45 C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி, மதுரை – 625 016.

போன் : 92 4421 4421, 92 4431 4431 Email : obey2jesus@gmail.com

Visit : www.graciousword.org

# முகவுரை

இந்த புத்தகத்தை நான் அஞ்சல் வழி வேதாகம பயிற்சிக்காக எழுதினேன். மேலும், இலங்கையிலுள்ள கொழும்பு நகரில் வெளியாகும் வார இறுதி பத்திரிக்கையில், வாரம் ஒரு பாடமாக 13 வாரங்கள் இது வெளிவந்தது. கர்த்தருடைய சபையைக் குறித்து அறியாதவர்களுக்கும், எவ்வளவு எளிதாக்க முடியுமோ அவ்வளவு எளிதாக்கும் வகையில் சிந்தனை திருப்பப்பட்டது. ஒவ்வொரு பாடமும் அதற்கு முந்தைய பாடத்தின் கருத்துக்களை ஒரு முறை மீண்டும் சிந்தனைக்கு கொண்டு வந்து, அந்தந்தப் பாடங்களில் கூறப்பட்ட முக்கியக் கருத்துக்களை உள்ளடக்கும் வண்ணம், பாடங்களின் இறுதியில் ஒவ்வொரு பாடத்திற்கும் 25 கேள்விகள் வீதம் கேள்வி தாள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலுள்ள புதுதில்லிக்கு நாங்கள் மாறிப்போனபோது, இந்தப் பயிற்சிப்பாடங்கள் புத்தக வடிவைப் பெற்றது. இது அநேக மொழிகளில் மறு அச்சு ஏற்றப்பட்டு, இப்படியாக இன்று வரை அச்சாகி கொண்டுள்ளது. பின்னதாக இது இலங்கை, சிங்கப்பூர், கவுத்தமாலா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் அச்சடிக்கப்பட்டது. மிகப் பரவலாக பயன்படுத்தப்பெறும் இப்புத்தகம், மேற்குறித்த நாடுகளில் மட்டுமல்லாது, உலகமெங்கிலும் உள்ள அநேக கிறிஸ்தவர்களுக்கும், சந்திக்கப்படும் நபர்களுக்கும் அனுப்பப்பட்டது.

இப்புத்தகத்தின் நோக்கம், வாசகர்களுக்கு **வேதாகம சபையை** அறிமுகப்படுத்துவதே! நீங்கள் இந்தப் புத்தகத்தை உங்கள் வேதாகமத்தை வைத்து ஆராய்வீர்களானால், கர்த்தருக்கு ஒரே ஒரு சபை மட்டுமே உண்டு என்பதையும், அது அவருடைய பெயரைத் தரித்துக்கொள்கிறது என்பதையும், அச்சபையில் நீங்கள் அங்கம்

வகிக்க வேண்டிய அவசியத்தையும் உணர்வீர்கள் என்றும், நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன். ஆனால் அதற்காக என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள வேண்டாம்! நீங்களாகவே பைபிளை வாசித்துப்பாருங்கள். இது உண்மையாக இருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். உண்மைக்குப் புறம்பாக இருக்குமேயானால் தள்ளிவிடுங்கள். நீங்கள் சரியாக இருக்க ஒரே வழி பைபிள் மட்டுமே!

கிறிஸ்தவர்கள் தங்கள் நண்பர்களுக்கு கர்த்தருடைய சபையை அறிமுகப்படுத்தும்படி உற்சாகப்படுத்துகிறோம். எங்கெல்லாம் இதை பயன்படுத்தக்கூடுமோ அங்கெல்லாம் நன்மை பயக்கும் என நான் நம்புகிறேன். எதிர்காலத்தில் அச்சடிக்கப்படவும், கிறிஸ்துவினிடத்தில் அநேக ஆத்துமாக்கள் பயன்பெறவும் இப்புத்தகம் சென்றடையும் எனவும் எதிர்பார்க்கிறேன்.

ஜே.சி. சோட்
ஆகஸ்ட், 1987

<u>குறிப்பு :</u>

இப்பாடப்புத்தகம் ஆங்கில மொழியிலும் மற்றும் சில இந்திய மொழிகளிலும் கிடைக்கும்.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : 92 4421 4421

# பதிப்பாளரிடமிருந்து

அன்புள்ளோரே,

இந்த ஆசீர்வாதமான வேதபாட புத்தகத்தை உங்களுக்கு அனுப்புவதில் மகிழ்ச்சியடைகிறோம். **"வேதாகம சபை"** என்னும் இப்புத்தகத்தின் ஆசிரியர் **சோட்** அவர்கள், 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா நாடுகளில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்தவர்.

சபையைப் பற்றிய இந்த அருமையான பாடங்கள் உங்கள் ஆத்துமாவை வளமாக்கி, உங்களுக்குத் தேவையான ஆவிக்குரிய சீர்திருத்தத்தை கொண்டுவருமென நம்புகிறேன்.

தயவுசெய்து முதலில் விண்ணப்பப் படிவத்தை நிரப்பி தபாலில் எங்களுக்கு அனுப்புங்கள். பின்பு ஒவ்வொரு பாடமாகப் படித்து, கேட்கப்பட்டிருக்கும் அப்பாடத்திற்கான கேள்விகளுக்கு விடைகளைத் தனித்தாளில் எழுதி, இறுதியில் அவற்றை மதிப்பீடு செய்யவும், அழகிய சான்றிதழ் பெறவும் எங்களுக்கு அனுப்புங்கள். பாடப்புத்தகத்தை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். எங்களுக்கு அனுப்ப வேண்டாம்!

இப்பாடங்கள் மூலம் நீங்கள் வேத புத்தகத்தின் காரியங்களை, வேதாகம வழியிலே செய்ய ஊக்கப்படுத்துவதே எங்கள் நோக்கமே தவிர, வேறு அல்ல! (Doing Bible things in Bible way only).

நீங்கள் ஒரு வேதாகம ஆசிரியரென்றால் குழுவாக அமர்ந்து இப்பாடங்களைப் படிக்க, புத்தகங்களைப் பெற எங்களுக்கு எழுதுங்கள். இப்பாடங்களைப் படிப்பதினால் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக !

கிறிஸ்துவின் பணியில்,
**P.C. பிலேமோன் ராஜா** M.A.,M.Th.
இயக்குனர், J.C. ஆத்தும ஆதாயப் பயிற்சிப் பள்ளி

# பொருளடக்கம்


| பாடம் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | சபை என்பதன் பொருள் | 9 |
| 2. | சபையின் வருகை | 13 |
| 3. | சபையின் ஸ்தாபிதம் (தோற்றம்) | 17 |
| 4. | சபையின் அடையாளம் | 21 |
| 5. | சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள் | 26 |
| 6. | சபையின் ஆளுகை அமைப்பு | 31 |
| 7. | சபைக்குள் நுழைவு | 36 |
| 8. | சபையின் ஆராதனை (தொழுகை) | 41 |
| 9. | சபையின் வேலைகள் (ஊழியம்) | 47 |
| 10. | சபையின் ஒற்றுமை ஐக்கியம் | 54 |
| 11. | சபையின் கோட்பாடு (கொள்கை) | 59 |
| 12. | சபையின் வரலாறு | 64 |
| 13. | இன்றுள்ள சபை | 71 |
| | கேள்வி - பதில் பகுதி | 79 |

# சபை என்பதன் பொருள்
# Meaning of the Church

வேதாகமம் சபையைக் குறித்து பேசுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், **யாருடைய சபை ? எந்த சபை ? என்ன சபை ?** இந்தக் கேள்விகளுக்கும், இன்னும் பல கேள்விகளுக்கும் நேரம் வரும்போது பதில் கிடைக்கும். ஆனால் தற்சமயம் சபை என்றால் என்ன ? என்பதைக் கண்டறிவோம். சபை என்றால், எது இல்லை? என்பதில் ஆரம்பிப்போம். வேதாகமத்தில் விளக்கப்பட்டுள்ள சபை கத்தோலிக்கமோ, புராட்டஸ்டண்டோ, யூத சபையோ அல்ல. அது ஒரு நாமகரண கூட்டமோ (Denomination), சபை பாகுபாடற்ற கூட்டமோ, ஒரு பிரிவோ அல்ல.

ஒரு அரசியல் அமைப்போ, சமூக நல அமைப்போ அல்லது உலகப் பிரகாரமான கட்டிடமோ அல்ல ; இவைகளில் எதுவுமாக சபை இல்லாவிடில், பிறகு அது என்ன ? பெரும்பாலான மக்கள், சபை என்றால் என்ன என்பதை அறியாதிருப்பதினால், சபையையும் அறிந்து கொள்வதில்லை. அதன் நோக்கத்தையோ, முக்கியத்துவத்தையோ, அதன் ஊழியத்தையோ புரிந்து கொள்ளாததின் விளைவே இது. ஆனால் வேதாகமம் மிகத் தெளிவாக சபை என்றால் என்ன என்பதைக் காட்டுகிறது.

சபை என்ற பதம் 'எக்லீசியா' என்னும் கிரேக்க வார்த்தையில், வெளியே "அழைக்கப்பட்டவர்கள்" என்னும் பொருளில் வருகிறது. எனவே சபை என்பது, 'அழைக்கப்பட்ட மக்களின் சரீரம் ' , அதாவது குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்ட மக்களின் சரீரம் (கொலோ 1 : 13). அது கிறிஸ்துவின் ஆவிக்குரிய

சரீரம் (1கொரி. 12:27), கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்தோரின் கூட்டம் (எபி.5:8,9), அவரால் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டவர்கள் (மாற்கு16:16, அப். 2:47) இன்னொரு வழியில் சொன்னால், சபை என்றால் கிறிஸ்துவைப் பின்பற்றுவோரின் கூட்டம் என்று பொருள்.

வேதாகமத்தில் சபை என்னும் பதம், **இரண்டு அர்த்தங்களில்** காணப்படுகிறது : **ஒன்று,** 'உலகளாவிய சபை' என்னும் அர்த்தத்தில், "மேலும், நான் உனக்கு சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் " என்று கிறிஸ்து **மத்தேயு.16 : 18** ல் கூறும் போது, இந்த அர்த்தத்தையே மனதில் கொண்டிருந்தார். உலகளாவிய சபை என்னும் பொருளில் சபை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதை, இன்னும் அநேக வசனங்கள் குறிப்பிட்டு உள்ளன. அதாவது, உலகில் எங்கே ஒரு சபை இருந்தாலும் அது வேதாகமத்தில் கூறப்பட்ட சபையாக இருப்பின், இயேசு தாம் கட்டுவதாகக் கூறிய சபை அதுவே !

**இரண்டாவது, 'உள்ளூர் சபை' [ஸ்தல பிராந்திய சபை]** என்னும் அர்த்தத்திலே பேசப்பட்டுள்ளது. உதாரணமாக, பவுல் ரோமாபுரியில் இருந்த சபைக்கு எழுதும் போது, பல உள்ளூர் பிராந்திய சபைகளைக் குறிப்பிட்டு, "கிறிஸ்துவின் சபையார் (சபைகள்) உங்களை வாழ்த்துகிறார்கள்" என்றார் **(ரோமர். 16:16).** பல உள்ளூர் சபைகள் என்று அவர் குறிப்பிட்டிருப்பது, பல நாமகரண (பிரிவுக்) கூட்டங்களை குறிக்காமல், கர்த்தருடைய சபையின் பல உள்ளூர் (ஸ்தல) சபைகளையே பற்றி பேசுகிறார். இதை மேலும் விளக்கப்படுத்த வேண்டுமானால், கொரிந்துவிலுள்ள சபை, எபேசுவிலுள்ள சபை, பிலிப்புவில் உள்ள சபை என்றெல்லாம் வேதவசனம் பேசுவதை நீங்கள் காணலாம் **(1 கொரி 1:2, எபேசி, 1:1, பிலிப். 1:1)** சபையை நாமகரணக் கூட்டங்களின் கண்ணோட்டத்திலேயே பார்த்து அநேகர் பழகிப் போனதால், மேற்சொல்லிய அனைத்தும் சற்று

குழப்பமாகவே தோன்றக்கூடும். ஆனால், 'முதல் நாமகரணக்கூட்டம்' என்ற ஒன்றை வேதாகமத்தில் பார்க்கவே முடியாது! தொடர்ந்து நாம் படிக்கையில், அநேக பிராந்திய சபைகளைப் பற்றி வாசிக்கிறோம். அவைகள் ஒவ்வொன்றும் அந்தந்த பிராந்தியத்தில் (பகுதியில்) உள்ள கர்த்தருடைய சபையே ! ஆனால் அவைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து உலகளாவிய சபையாக உள்ளது. ஒருவர் தனது நாமகரணக் கூட்டத்தை மறந்து, வேதாகமத்திற்குத் திரும்பி, கர்த்தர் கொடுத்த சபையை உள்ளபடி காண்பது மிகவும் எளிது.

மேலும் வசனங்களின் மூலம் சபையை, வேதாகமம் காட்டும் விதத்தில் கீழ்வருகின்றவனவற்றைப் புரிந்து கொள்வோமாக,

1. **கிறிஸ்துவின் சரீரம் :** சபை, கிறிஸ்துவை தலையாகக் கொண்ட ஆவிக்குரிய சரீரம் **(எபேசி. 5:23).** ஒரே சரீரம் மட்டுமே உண்டு **(எபேசி. 4.4),** அந்த ஒரு சரீரம் என்பது ஒரே சபை **(கொலோ. 1:18).**

2. **தேவனுடைய வீடு :** வீடு என்று வசனத்தில் குறிப்பிடுவதின் மூலம், சபையானது தேவனுடைய குடும்பம் என்னும் பதத்தில் வேதாகமம் பேசுகிறது என்று நாம் அறிய உதவுகிறது. **1 தீமோத். 3:11**-ல், சபையானது 'ஜீவனுள்ள தேவனுடைய வீடாயிருக்கிறது' என்று பவுல் கூறுகிறார். தேவன் நம்முடைய பிதாவாக இருக்கிறார், நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம் **(கலாத். 3:26, 27, எபேசி. 1:2,3).**

3. **தேவனுடைய இராஜ்யம் :** இராஜ்யத்திற்குத் தேவை ராஜா; எனவே கிறிஸ்துவே அரசராயிருக்கிறார் **(வெளி. 17:14).** ஆனால் அவர்

இராஜாவாயிருப்பாரானால், அரசு இப்பொழுது இருக்கவேண்டும். ஆம்! அது இருக்கிறது (அப்போ. 8:12). நாம் அவருடைய மக்களாகவும், உலகம் அதின் எல்லையாகவும், புதிய ஏற்பாடு அதன் சட்டப் புத்தகமாகவும் இருக்கிறது. இதுவே சபை, (மத்தேயு. 16:18, 19).

4. **கர்த்தருடைய திராட்சைத்தோட்டம் :** கிறிஸ்து செடியாகவும், தனிப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும் கொடிகளாகவுமிருக்கிறோம் (யோவான் 15:1–8). இதன் கருத்து என்னவெனில், திராட்சைத் தோட்டத்தில் வேலை (ஊழியம்) செய்வதையும், கர்த்தருக்கென்று கனி கொடுப்பதையும் குறித்துப் பேசுகிறது.

சபையானது இப்படியெல்லாம் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. தயவு செய்து வேதத்தின் வெளிச்சத்தில் இவைகளை வாசித்து, நீங்களே பார்த்துப் புரிந்து கொள்ளுங்கள். சபையை நாம் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறாரோ, அதன்படி நாம் புரிந்துகொண்டால், பிறகு உங்களின் முழு எண்ணங்களும் மாறும், மேலும் உங்கள் வாழ்க்கையே மாறக் கூடும்.

# சபையின் வருகை
# The Coming of the Church

சபையானது திடீரென ஒரு இராத்திரியிலே வந்துவிடவில்லை. அது திட்டமிடப்பட்டு, தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு, வாக்குத்தத்தம் செய்யப்பட்டு, பிறகு ஸ்தாபிக்கப்பட்டது. வேதாகமம் இவையனைத்தையும் தெளிவாகக் காட்டுகிறது.

**முதலாவதாக, சபை தேவனுடைய மனதிலே இருந்தது.** இதைப் பவுல், எபேசு பட்டணத்து பரிசுத்தவான்களுக்கு விளக்கப்படுத்துகிறார். அவர் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்" **(எபே. 1:3–6)** என்கிறார்.

எபேசு பட்டணத்துச் 'சபைக்கு' அவர் பேசுகிறார் என்பதையும், உலகத் தோற்றத்துக்கு முன்னே அவர்களை தேவன் தெரிந்து கொண்டார் என்பதையும் குறிப்பிடுகிறார். உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே தேவன் சபையைக் குறித்து எண்ணிக் கொண்டிருந்தார் என்பது இதன் பொருள். அதாவது, தேவன் இதை அப்பொழுதே திட்டமிட்டார்; ஆதலால் தேவனுடைய மனதில் அது இருந்தது. எனவே, தேவன் ஆதியிலிருந்தே தமது மனதில் திட்டமிட்ட காரியத்தை ஒரு சாதாரணமாக, அற்பமாக, மதிப்புக் குறைவாக நாம் எப்படி எண்ண இயலும்?

**இரண்டாவதாக, சபையானது அநேக நிகழ்ச்சிகளில் தீர்க்கதரிசனமாகப் பேசப்பட்டது.** "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம், பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்குள் ஓடி வருவார்கள்" என்று ஏசாயா சொன்னார் **(ஏசாயா 2:2).** யோவேல், "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்" என்று சொன்னார் **(யோவேல். 2:28, 29).** பின்பு தானியேல் குறிப்பிடும்போது, "அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த இராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" என்றார் **(தானியேல். 2:44)**

இப்பொழுது மேற்குறிப்பிட்டவைகளிலிருந்து சில முடிவுகளுக்கு வருவோமாக.

1. இராஜ்யம் (அரசாட்சி) கடைசி நாட்களில் நிறுவப்படும்.

2. அது மலைகளிலே நிறுவப்படும்.

3. எல்லா ஜாதிகளும் (தேசங்களும்) அதற்குள் ஓடிவருவார்கள்.

4. கர்த்தர் தமது ஆவியை மாம்சமான யாவர் மேலும் ஊற்றுவார்.

5. உலகின் நான்காவது பேரரசின் காலத்தில் அது நிறுவப்படும்.

6. மற்ற அரசுகளை அது அழித்து தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

இவைகள் அனைத்தும் எங்கே நிறைவேறிற்று ? **அப்போஸ்தலர். 2-ம்** அதிகாரத்தை வாசியுங்கள்.

**மூன்றாவதாக, சபை வாக்குத்தத்தம் செய்யப்பட்டது.** யோவான், அது சமீபித்து இருப்பதாகக் கூறினார் **(மத்தேயு. 3: 2).** இதன் பொருள், விரைவாக அல்லது சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படும் என்பதாகும். கிறிஸ்துவும், "...நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை." **(மத். 16:18)** என்று வாக்களித்தார். "அன்றியும் அவர் அவர்களை நோக்கி: இங்கே நிற்பவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" **(மாற்கு. 9:1)** என்று இயேசு கூறினார். "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்." **(லூக்கா 24:46-49)** என்று வேதாகமம் கூறுகிறது.

**இப்பொழுது கீழ்வருவனவற்றைக் கூர்ந்து கவனிக்கவும் :**

1. இராஜ்யம் (அரசாட்சி) சமீபித்திருந்தது. **(மத். 3)**

2. கிறிஸ்து தமது மரணத்துக்குப்பின் அதை நிறுவுவதாக வாக்குத்தத்தம் செய்தார். **(லூக். 24)**

3. கிறிஸ்துவோடு இருந்தவர்களில் சிலர், இராஜ்யம் நிறுவப்படும்போது உயிரோடிருப்பார்கள். ( மாற்கு 9 )

4. இராஜ்ஜியம் பெலத்தோடே வரும். ( மாற்கு 9 )

5. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்படும். ( லூக் 24 )

6. சபை எருசலேமிலே ஆரம்பமாகும். ( லூக் 24 )

7. அப்போஸ்தலர்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுவார்கள். ( லூக் 24 )

தயவு செய்து மேற்குறித்த அனைத்தையும் மனதில் இருத்திக் கொள்ளுங்கள். இறுதியில் சபை நிறுவப்படுதலையும், அப்பொழுது அவைகள் அனைத்தும் நிறைவேறுதலையும் காண்பீர்கள்.

இப்பொழுது அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்திற்குத் திருப்புங்கள். இதைப் பலமுறை வாசித்துப் பாருங்கள். எல்லா வேதாகம நிபுணர்களுமே, வேதம் சொல்லுகிறபடியே சபை இந்நேரத்தில் தான் ஸ்தாபிதம் பெற்றது என்பதை ஒப்புக் கொள்கின்றனர். மேலும் **எருசலேம்** என்னுமிடத்தில், **கடைசி நாட்களில்** என்னும் காலத்தில், **ரோம சக்கரவர்த்திகளின்** நாட்களில் பெலன் வந்தது; மனந்திரும்புதலும், பாவ மன்னிப்பும் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட்டது. அதிலிருந்து சபை தொடர்ந்து இருக்கிறது. எனவே, **தேவன் தமது மனதில் எண்ணியிருந்த சபை நிறுவப்பட்டது.** அதைத் குறித்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின; அதைக் குறித்த வாக்குத்தத்தங்களும் பூர்த்தி செய்யப்பட்டன.

# சபையின் ஸ்தாபிதம் (தோற்றம்)
# The Establishment of the Church

நமது கடந்த பாடத்தில் **ஏசாயா 2:2,3**லும், **யோவேல், 2:28, 29**லும், **தானியேல் 2:44**-லும் கர்த்தருடைய அரசாட்சி (அல்லது சபை) கடைசி நாட்களில், எருசலேமில், ஆவியின் வருகையின்போது நிறுவப்பட்டு, எல்லா நாட்டு மக்களும் அதற்குள் ஓடி வருவார்கள் என்றும், அது என்றென்றைக்கும் நிற்கும் எனவும் கண்டோம். பின்பு **மத்தேயு. 16:18, மாற்கு, 9:1, லூக்கா. 24:46–49,** ஆகிய வசனங்களில், கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்து, தமது சபையை தானே கட்டுவதாகவும், சபை பெலத்தோடே வரும் என்றும், மேலும் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் கிறிஸ்துவினுடைய நாமத்தில் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்படவேண்டியது என்றும் கூறினார். **அப்போஸ்தலர் 2ம்** அதிகாரத்திற்கு நாம் திருப்பினால், இந்த அதிகாரத்தில் மாத்திரம் மேற்குறித்த அனைத்து தீர்க்கதரிசனங்களும் வாக்குத்தத்தங்களும் நிறைவேறியிருப்பதைக் கண்டுபிடிக்கலாம்.

**அப்போஸ்தலர் 2**-ம் அதிகாரத்தை நாம் படிக்கும்போது, அந்த நேரத்தில் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் அனைவரும் எருசலேமில் இருந்தனர். "பெந்தகோஸ்தே (50வது நாள்) என்னும் நாள் வந்த போது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக்

காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள். அந்த சத்தம் உண்டான போது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்." **(அப். 2:1-6). தொடர்ந்து கூறுகையில், அநேக தேசத்தார் கூடி வந்திருந்தபோது,** "எல்லாரும் பிரமித்து சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். மற்றவர்களோ அவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள். அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து (காலை 9 மணி) மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது ... அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்" **(அப்போஸ்தலர் 2:12-16, 21).**

**பழைய ஏற்பாட்டு இந்த தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறியதைக் காட்டிய பிறகு, பேதுரு தனது பிரசங்கத்தைத் தொடருகிறார். தேவன் பலத்த செய்கைகளாலும், அற்புதங்களாலும், அடையாளங்களாலும் இயேசுவை அவர்கள் நடுவிலே வெளிப்படுத்தினார் எனக் காட்டுகிறார். அடுத்து, கிறிஸ்து ஆலோசனை சங்கத்தாரிடம் ஒப்புக் கொடுக்கப்பட்டதையும், அக்கிரமக்காரர்களின் கைகளினால் அவர் சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்யப்பட்டதையும்**

கூறுகிறார். பிறகு தேவன், மரணத்தினின்று இயேசுவை எழுப்பியதையும், மரண வாதையிலிருந்து அவரை விடுதலையாக்கினதையும் குறிப்பிடுகிறார். தனக்கு முன்பிருந்த கூட்டத்தாரை ஏற்றுக்கொள்ளச் செய்ததை சுட்டிக்காட்டி, கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து பரமேறிப்போன காரியங்களை குறிப்பிட்டு, அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதைக் காட்டுகிறார்.

தொடர்ந்து அவர் **(பேதுரு),** "இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும், கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என் வலது பாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார். என்று அவனே சொல்லியிருக்கிறான். ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள் என்றான்.

இதை அவர்கள் கேட்ட பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி, இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி மாறுபாடுள்ள இந்த சந்ததியை

விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள், ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்." **(அப். 2:32–41, 47).**

மேற்கொண்டு தொடர்ந்து வரும் வசனங்களில் சபை நிறுவப்பட்டது என்பதையும், இவைகள் அனைத்தும் எருசலேமில் நடந்த சம்பவங்கள் என்பதையும் கவனித்திருப்பீர்கள். பரிசுத்த ஆவியின் பெலன் அப்போஸ்தலர்கள் மீது ஊற்றப்பட்டது. நடந்தவைகள் அனைத்தும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசன நிறைவேற்றமே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது என்று பேதுரு குறிப்பாய்ச் சொன்னார் **(அப். 2:16).** எனவே, இதில் சந்தேகமில்லை. மேலும், தீர்க்கதரிசிகள் கடைசி நாட்களில் இவைகள் சம்பவிக்கும் என்று கூறியிருப்பதாலும், தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டபடியே அது நடந்தேறுவதாக பேதுரு கூறுவதாலும், சபை கடைசி நாட்களில் ஸ்தாபிக்கப்பட்டது. சகல தேசத்தாரும் அந்த நாளிலே கூடியிருந்தனர். மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் பிரசங்கிக்கப்பட்டு, 3000 பேர் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து, இரட்சிக்கப்பட்டு, சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆகையால், கிறிஸ்து சபையை எருசலேமில் கி.பி.33ல் நிறுவினார். அது இன்றும், என்றும் நிலைத்திருக்கும்.

# சபையின் அடையாளம்
# Identity of the Church

வெகுநாட்களுக்கு முன் காணாமல் போன உங்கள் நண்பனை நீங்கள் எப்படி அடையாளப்படுத்துவீர்கள்? இயல்பாகவே, நீங்கள் அநேக அடையாளக் குறிகளைக் கண்டுபிடித்து ஆராய முயற்சிப்பீர்கள்; நீங்கள் தேடி ஆராய்ந்து, முறைப்படி தனித்தனி அடையாளங்களை பொருத்தமாகக் கண்டுபிடித்தபின், அவரைத் தான் நீங்கள் தேடினீர்கள் என்று ஏற்றுக் கொள்வீர்களல்லவா ?

அதுபோலவே, இன்று உலகில் அநேக சபைகள் உள்ளன. எது சரியான, உண்மையான சபை என்று எப்படி தெரிந்து கொள்வீர்கள் ? எது கிறிஸ்துவின் சபை என்று ஒருவர் எப்படி கண்டுகொள்ளக்கூடும்? வித்தியாசப்பட்ட சபைகளில் உள்ள அடையாளக் குறிகளோடு நீங்கள் ஒப்பிடவேண்டும். சரியான அடையாளக் குறிகளை பொருத்தமாக நீங்கள் கண்டுபிடித்தபின், சரியானதை நீங்கள் கண்டுபிடித்ததாக கொள்ளவேண்டும். பொருத்தமான அடையாளக் குறிகளை கண்டுபிடித்த பிறகே, சரியான ஒன்றை நீங்கள் கண்டுபிடித்ததாகும். ஆனால் அந்த அடையாளக் குறிகள் யாவை? அவைகளை எங்கே காணலாம்? வேதாகமமே இதற்கு பதிலளிக்கிறது.

சபையைக் குறித்த உண்மையான அடையாளங்களை வேதாகமம் கொடுக்கிறது. எனவே அதைத் திரும்பிப்பார்த்து அந்த அடையாளங்கள் எவை ? என ஆராய்வோமாக:

1. ***கிறிஸ்து சபையை நிறுவினார்.*** "மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின்

வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத். 16:18).

2. **அது எருசலேமில் ஆரம்பிக்கப்பட்டது.** லூக். 24:45-49லும் அப்.2:5லும் இதை நாம் காணலாம்.

3. **ஆரம்பிக்கப்பட்ட காலம் கி.பி.33.** இதுவும் அப்.2-ல் சபை நிறுவப்பட்ட பெந்தகோஸ்தே நாள் சம்பவமே.

4. **சபை கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொண்டது.** பல வித்தியாசப்பட்ட பிராந்திய சபைகளைக் குறித்துப் பேசுகையில், பவுல், "கிறிஸ்துவின் சபையார் (சபைகள்) உங்களை வாழ்த்துகிறார்கள்" என்று எழுதுகிறார், (ரோ. 16:16). கொரிந்து பட்டணத்து சபைக்கு அவர் தொடர்ந்து பேசும் போது, "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாகவும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" என்கிறார். (1 கொரி. 12:27). ஆனால் சரீரம் என்றால் என்ன? சபை (எபே. 1:22, 23).

5. **அதன் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.** "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப். 11:26). "அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி; நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான்" (அப்.26:28). "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" (1பேதுரு 4:16). இறுதியாக, இதை ஞாபகத்தில் வையுங்கள், "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை." (அப். 4:12).

6. **கிறிஸ்துவே அதன் ஒரே தலை.** "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்;

எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (**கொலோ. 1:18**).

7. **அது ஒரே ஒரு சபை மட்டுமே !** "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு." (**எபே. 4:4**). ஆனால் சரீரம் என்பது என்ன ? அது தான் சபை! (**கொலே.1:18**). ஆதலால் ஒரே சரீரமென்று அழைக்கப்படுமாகில், அதுவே சபை என்றும் சொல்லப்படும்போது, ஒரே ஒரு சபை மட்டுமே உண்டு.

8. **சபைக்குள் நுழைய சில வரம்புகள், அல்லது வரைமுறைகள் உள்ளன.** அவை விசுவாசத்தையும் (**எபி.11:6**), மனந்திரும்புதலையும் (**அப். 17:30**), விசுவாச அறிக்கையையும் (**ரோ. 10:9,10**), ஞானஸ்நானத்தையும் (**மாற்கு. 16:16**) உள்ளடக்கியதாகும். ஒருவர் இரட்சிக்கப்பட்டால், அவர் சபையிலே சேர்க்கப்படுகிறார் (**அப்.2:47**). மேலும் **ரோமர் 6:3,4**லும்; **கலா. 3:26,27**லும்; **1 கொரி 12:13**லும் ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் ஞானஸ்நானம் பெறுவதாகப் போதிக்கின்றன. இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலம் ஒருவர் சபைக்குள் அல்லது இறையரசுக்குள் (இராஜ்யம்) பிறக்கிறார் (**யோ. 3:3-5**).

9. **சபையின் ஆராதனை/தொழுகை தனிச்சிறப்புடையது.** கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளிலே கூடி (**அப்.20:7**), பாடவும் (**எபே. 5:19**), ஜெபிக்கவும் (**அப். 2:42**), வேதத்தை ஆராயவும் (**2 தீமோத்தேயு 2:15**), கர்த்தருடைய பந்தியிலே பங்கு பெறவும் (**அப். 20:7**), காணிக்கை கொடுக்கவும் (**1 கொரி 16:2**) வேண்டும்.

10. **சபையின் உபதேசக் கோட்பாடுகள் வேதாகமத்தை மட்டுமே**

அடிப்படையாகக் கொண்டது. அத்துடன் கூட்டப்படாமலும், குறைக்கப்படாமலும், எதையும் மாற்றாமலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். **(வெளி. 22:18, 19: கலா. 1:6–11).** வேதாகமம் மட்டுமே சபையின் ஒரே ஒரு உபதேசப் புத்தகம். அத்துடன் இணைக்கப்படும் புத்தகங்களோ, உபதேசங்களோ, புறக்கணிக்கப்பட வேண்டியவை.

11. **சபையின் ஆளுகை அமைப்பு தேவனுடைய திட்டத்தின்படி இருக்க செயல்பட வேண்டும்.** கிறிஸ்துவை தலையாகவும் **(எபே. 5:23),** ஒவ்வொரு பிராந்திய சபையும் ( தனி சபையும் ) அதனதன் மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் கொண்டிருத்தல் அவசியம் **(1 தீமோ 3: தீத்து 1).** கர்த்தருடைய சபைக்கு பூமிக்குரிய தலைவரோ, தலைமையகமோ அல்லது தேசிய அல்லது அகில உலக ரீதியான மனிதனால் உண்டான அமைப்புகளோ இல்லை.

12. **சபையின் ஊழியம் மூவகைப்படும்.** அதன் மிக முக்கியக் கடமை சுவிசேஷ ஊழியம் செய்வது **(மாற்கு 16:15, 16),** தேவையுடையவர்களுக்கு உதவுவது **(கலா.6: யாக்கோபு2),** அங்கத்தினர்களுக்கு பக்திவிருத்தி ஏற்படுத்துவது. **(எபி. 3:12–14).**

13. **ஒவ்வொரு கிறிஸ்தவனும் விசுவாசமுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும்.** உலகை நாம் நேசிக்கக் கூடாது **(1யோ. 2:15: யாக் 4:4),** மேலும் ஆவியின் கனிகளைக் கொடுக்க வேண்டும், **(கலா. 5:22, 23).** மரணபரியந்தம் விசுவாசமுள்ளவர்களே, ஜீவகிரீடத்தைப் பெறுவார்கள் **(வெளி. 2:10).**

இவைகள் சபையின் சில அடையாளங்களாகும். இவைகள் வேதாகமத்தில் உள்ள மாதிரியே அமைப்பு பெற்றவை. உங்கள் சபையை இந்த வசனக்

குறிப்புகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். உதாரணமாக, முதல் நான்கினை எடுத்துக்கொள்ளுங்கள். "நானிருக்கும் சபையை நிறுவியது யார்?" என்று கேளுங்கள். அந்த சபை கிறிஸ்துவால் நிறுவப்பட்டதா? அல்லது வேறு மனிதனாலா? பின்பு "என்னுடைய சபை எங்கு நிறுவப்பட்டது?" என்று கேளுங்கள். அதன் ஆரம்பம் எருசலேமிலா, வேறு எங்குமா? தொடர்ந்து, "அந்த சபை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது" என கேளுங்கள். அந்த சபை கி.பி.33க்குப் பிறகு நிறுவப்பட்டிருந்தால், அது கர்த்தருடைய சபையாக இருக்க வாய்ப்பில்லை. இறுதியாக, உங்களை நீங்களே கேளுங்கள் "எனது சபை என்ன பெயரைத் தரித்துக் கொண்டுள்ளது?" கிறிஸ்துவின் பெயரை தரித்துக்கொண்டிராவிட்டால், அது கிறிஸ்துவுக்குரிய சபையாக எப்படி இருக்க முடியும்? தொடர்ந்து இன்னும் எத்தனையோ கேள்விகளை நீங்கள் கேட்கலாம். ஆனாலும் மேற்குறித்த கேள்விகள், உங்கள் சபை கிறிஸ்துவுக்குரியது தானா? அல்லது மனிதனுக்குரியதா? என்று அறிய உதவிபுரியும். உங்களுக்குத் தெரிந்த பிற சபைகளும், தேவனுக்குரியதுதானா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க இந்த அடையாளங்கள் பயனுள்ளவைகளாகும். நீங்கள் நேர்மையானவர்களாயிருந்தால், வித்தியாசங்களைக் கண்டறிவீர்கள் என நம்புகிறேன்.

நீங்கள் இருக்கும் சபை வேதாகமத்தில் இருக்கும் உண்மையான சபையாக இல்லாதிருக்குமானால், பிறகு அதை விட்டுவிட்டு, சத்தியத்தைக் கற்று, அதற்குக் கீழ்ப்படிந்து, தேவனுடைய வசனத்தில் நீங்கள் படிக்கின்ற சபையில் கர்த்தரால் சேர்த்துக் கொள்ளப்பட முயலுங்கள், என நான் ஊக்கப்படுத்துகிறேன். அதன் மூலம் (உண்மையான) இரட்சிப்பு உள்ள சபையில் நீங்கள் இருப்பீர்கள்.

# சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள்
# Name of the Church

சபை வசன ரீதியாக இருக்குமாயின், அதன் பெயரும் வசன ரீதியாக இருக்கவேண்டும். எப்படியிருப்பினும், மனிதர்களால் உருவாக்கப்பட்ட அநேக சபைகள் மனிதப் பெயர்களையும் பட்டங்களையும் கொண்டுள்ளன. இவைகள் எப்படி வந்தன? சில சபைகளுக்கான பெயர்கள், அதைத் தோற்றுவித்தவர்களை கனப்படுத்தும்படி வைக்கப்பட்டன. "லுத்தரன்" போன்றவை அப்படிப்பட்டது. சிலர் ஞானஸ்நானம் (திருமுழுக்கு) அல்லது கர்த்தருடைய ஊழியத்தை செய்கிற முறை (Method) போன்றவற்றை உயர்த்திக் காட்டும்படி பெயரிட்டனர். சிலர், பெந்தெகோஸ்தே அல்லது ஏழாம் நாளாகிய ஓய்வு நாள் போன்ற நாட்களை மகிமைப்படுத்தத்தக்க வகையில் பெயரிடுகின்றனர். இன்னும் சிலர், சபையின் ஆளுகை அமைப்பை கோடிட்டுக் காட்டி, சபையின் கண்காணிகளின் (Presbyters) ஊழியத்தைக் கொண்டு பெயரிட்டுள்ளனர். ஆனால் இவைகள் அனைத்தும், இன்னும் குறிப்பிட இயன்றவைகளுமாகிய அனைத்துப் பிரிவுகளும், கிறிஸ்துவுக்குரிய கனம், மகிமை, துதிகளை, மேற்குறித்த மனிதர்களால் உருவான பிரிவுகளுக்கு பெயர்கள், பட்டங்கள், விளக்கங்கள் என்ற பெயரில் கொடுக்கின்றனர்.

அநேகக் காரணங்களால் மனிதப் பெயர்களும், பட்டங்களும் தவறானவை. **முதலாவதாக,** அவைகள் பிரிவினைகளை உண்டாக்குகின்றன. தேவன் செயல்படுத்த எண்ணாத வித்தியாசங்களை அவைகள் ஏற்படுத்துகின்றன. ஜனங்களை அவைகள் பிரிக்கின்றன. நாம் எல்லோரும் ஒன்றாயிருக்க வேண்டும்

என கிறிஸ்து ஜெபித்த பதிவாகிய, **யோ. 17-ம்** அதிகாரத்தையே (அவர்கள்) அவைகள் எதிர்க்கின்றன.

**இரண்டாவதாக,** வேத வசனங்களிலே (பிரிவினைகளாகிய) அவைகள் கடிந்து கொள்ளப்பட்டுள்ளன. **1 கொரி 1:10–17ல்** அப்போஸ்தலனாகிய பவுல், மனிதப் பெயர்களைத் தரித்துக் கொண்டு, பிரிவினைகளையும் குழுக்களையும் உண்டாக்கி சகோதரர்கள் பிரிவது தவறு என்கிறார்.

**மூன்றாவதாக,** கர்த்தருடைய பெயருக்குப் பதிலாக மதப்பெயர்களை சூடிக் கொள்கிற முறையிலும் அவைகள் தவறானவை. இருந்தும் கிறிஸ்துவின் பெயரைக் குறித்து "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் (பெயர்) வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை " **(அப். 4:12)** என்று வாசிக்கிறோம்.

**நான்காவதாக,** மனிதனால் (சபைக்கு) கொடுக்கப்படும் பெயர்களும் பட்டங்களும் தவறாக வழிநடத்தவும், குழப்பங்களை விளைவிக்கவும், அவிசுவாசிகளுக்குள்ளே தவறான எண்ணங்களை உருவாக்கவும் செய்கிறது.

**ஐந்தாவதாக,** அப்படிப்பட்ட சபைகள், பெயர்களைத் தரித்துக் கொள்பவர்களையும், அவர்களால் கிறிஸ்துவினிடத்தினின்று வழுவிப்போனவர்களையும், நித்திய ஜீவனை இழந்துபோகச் செய்யும். இந்தக் காரணங்களால் அவைகள் தவறானவைகளும், பாவங்களுமாகும்.

சபையைப் பொருத்தமட்டில், கிறிஸ்து ஸ்தாபிப்பேன் என்று வாக்களித்து, பின் அதை நிறுவினார் **(மத். 16:18).** அவர் தமது சுய இரத்தத்தினாலே அதை

சம்பாதித்துக் கொண்டார் என்று வசனம் சொல்லுகிறது (அப்.20:28): அவரே அதற்கு இரட்சகராயிருக்கிறார் (எபே. 5:23), தலையாயுமிருக்கிறார் (கொ.1:18), ஸ்தாபகரும் (நிறுவனர்), கட்டியவரும், இரட்சகரும், தலையாயுமிருக்கிறவருடைய பெயரை சபை தரித்துக் கொள்ள வேண்டியது இயற்கைதானே! ஆதலால் தான் ரோமாபுரி சபையாருக்கு பவுல் எழுதும்போது, தனது வட்டாரத்தில் இருந்த ஒவ்வொரு பிராந்திய சபையார்களுடன் சேர்ந்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கும்போது, "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" என்று சொன்னார் (ரோம. 16:16). பிறகு கொரிந்து பட்டணத்து சபைக்கு சொல்லும்போது, "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" என்றார் (1 கொரி 12:27). சரீரமே சபையாகையால் (எபே 1:22,23), அவர் கிறிஸ்துவின் சபையைப் பற்றியே பேசுகிறார். மேலும் சபையானது, தேவனுடைய சபை (1 கொரி 1:2; அப் 20:28) என்றும், தேவனுடைய இராஜ்யம் (1 கொரி 6:9) என்றும், கிறிஸ்துவின் இராஜ்யம் (எபே 5:5) என்றும், அவருடைய அன்பின் குமாரனுடைய இராஜ்யம் (கொலே 1:13) என்றும், நமது ஆண்டவருடைய இராஜ்யம் (2 பேதுரு 1:11) என்றும், சபை (அப் 13:1) என்றும், ஜீவனுள்ள தேவனுடைய சபை (1 தீமோ 3:15) என்றும், முதற்பேறானவருடைய சபை (எபி.12:23) என்றும் கூறப்பட்டுள்ளன. வேறெந்த தனி நபருடைய பெயரிலோ சபை அமைக்கப்படவில்லை. அதே வேளையில், தேவனுக்குரியதெல்லாம் கிறிஸ்துவுக்குரியவை; அதேபோல், கிறிஸ்துவுக்குரியவை எல்லாம் தேவனுக்கு உரியவை. மேலும், மேலே உள்ள பெயர்கள் அனைத்தும் கிறிஸ்து உண்டாக்கிய சபையையே குறிக்கும். அது கிறிஸ்துவினுடைய சபையாக இராவிட்டால், பிறகு அது யாருடைய சபையாகும்? அதோடு, இந்தப் பெயர்களையும் அதற்குரிய விளக்கப் பதங்களையும் பார்த்த

பின்னும், கர்த்தருடைய சபைக்கு வேறே (மனிதப்) பெயர்களைத் தெரிந்துகொண்டு, சத்தியத்திற்குப் புறம்பே விலகிப் போவதில் அநேகர் நாட்டம் செலுத்துகின்றனர். ஆனால் நாமோ வேதாகமம் சபையைக் குறித்து கூறுவது எதுவோ, அதே பெயரில் அழைப்போமாக! அப்பொழுது நாம் சரியானவர்களாய் இருப்போம்.

சபை அங்கத்தினர்களுக்கு இடப்படும் பெயர்களையும் குறித்து வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது. துவக்கமாக, தீர்க்கதரிசியாகிய ஏசாயா கூறும்போது, தேவன் தமது மக்களுக்கு ஒரு புதிய நாமத்தைக் (பெயரைக்) கொடுப்பார் என்று சொன்னார். **(ஏசாயா. 62:2)** அநேக வருடங்களுக்குப் பிறகு, பவுல் அந்த நாமத்தைத் குறித்துப் பேசினார். **(அப்போஸ்தலர். 9:15):** ஆனாலும், புறஜாதிகளுக்கும் தேவனுக்குக் கீழ்ப்படிகிற சந்தர்ப்பம் கிட்டும்வரை அந்த நாமம் நடைமுறையில் கொடுக்கப்படவில்லை. இவைகள் அனைத்தும், சீரியாவிலுள்ள அந்தியோகியாவிலே சீஷர்கள் முதல் முதலில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டபோது நிறைவேறியது **(அப். 11:26).** பின்னதாக நாம் வாசிப்பது, பவுல் அகிரிப்பா இராஜாவினிடத்தில் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது, "பவுலே, நீ என்னைக் கொஞ்சங்குறைய கிறிஸ்தவனாக சம்மதிக்கப்பண்ணுகிறாய்" **(அப்.26:28)** என்று (இராஜா) சொன்னான். இறுதியாக "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" என்று பேதுரு சொல்லியிருப்பதை வாசிக்கிறோம். **(1 பேதுரு 4:16).**

எனவே புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள், கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே அழைக்கப்பட்டனர் என்பது தெளிவான ஒன்று. இன்றைக்கு கர்த்தர் நம்மிடத்திலும், இப்படி அழைக்கப்படுவதையே எதிர்பார்க்கிறார். கிறிஸ்தவர்கள் என்று மாத்திரம் அழைக்கப்படாமல், கூடவே வேறு

ஒரு பெயரையோ அல்லது பட்டத்தையோ தரித்துக் கொள்வோமாகில், பிறகு நாம் உண்மைக் கிறிஸ்தவர்களாக இருக்க இயலாது. கிறிஸ்தவன் என்ற பெயர், ஒருவரை உலகிலுள்ள மற்றவர்களிடத்திலிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது; அதைத்தான் கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

சபைக்குரிய பெயரிலும், அதன் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படும் பெயரிலும், கிறிஸ்துவின் நாமமே உயர்த்தப்படவேண்டும். ஏனெனில், அது குடும்பப் பெயர்(எபே. 3:14,15), அது எல்லா நாமத்திற்கும் மேலானநாமம்(பிலி. 2:9-11), மேலும் அந்த நாமத்திலேயே இரட்சிப்பு காணப்படுகிறது (அப். 4:12). ஆகையால், நாம் கிறிஸ்துவின் நாமத்தை விசுவாசிக்க வேண்டும் (1 யோ. 5:13), இந்த நாமத்தை அறிக்கையிட வேண்டும் (2 தீமோ. 2:19), மனந்திரும்பி அந்த நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப்.2:38), அந்த நாமத்தினாலே கூடி தொழுகை செய்ய வேண்டும் (மத். 18:20), எல்லாவற்றையும் அவருடைய நாமத்தினாலே செய்ய வேண்டும் (கொலே. 3:17), மேலும் அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனைப் பெறுகிறோம் (யோ 20:30,31).

மேற்கூறியவைகளை எல்லாம் ஒருவர் மனதில் கொண்டால், ஒருவரும், பெயரிலே (நாமத்திலே) ஒன்றுமில்லை என்று சொல்லமாட்டார்கள். நிச்சயமாக மனிதனுடைய நாமத்திலேயோ, தரித்துக்கொள்ளும் பட்டத்திலேயோ இரட்சிப்பு இல்லை. மாறாக, அதைத் தரித்துக் கொண்டவர்கள், அதனாலேயே, (ஆத்துமாவை) இழந்து போனவர்களாக இருப்பார்கள். மாறாக, கிறிஸ்துவின் நாமத்தில் மட்டுமே இரட்சிப்பு உண்டு!

# சபையின் ஆளுகை அமைப்பு
# Organization of the Church

கிறிஸ்து சபையை ஸ்தாபித்தார், (மத். 16:18). அந்த சபை உலகெங்கிலும் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் (கொ. 1:13, 14). இது இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டது (அப். 2:47). இது அவருடைய ஆவிக்குரிய சரீரம் (கொ. 1:18): அது ஒரே சரீரமாயிருக்கிறது (எபே. 4:4).

சபை என்பது உலகளாவிய ரீதியில் பேசப்பட்டாலும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பிராந்தியங்களைக் கொண்டு அமைவு பெற்றதும், ஒவ்வொரு பிராந்திய சபையும் தனித்தனி அங்கத்தினர்களைக் கொண்டதுமாயிருக்கிறது. சபை என்பது தேசிய ரீதியாகவோ, அகில உலகரீதியாகவோ அமைவு பெற்ற ஆளுகைக்குட்படாமல், அந்தந்த பகுதி பிராந்தியங்களின் சுய ஆளுகைக்கு உட்பட்டது என்பது இதன் பொருள். இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், கர்த்தருடைய சபைக்கு பூமிக்குரிய தலைவரோ, தலைமையகமோ இல்லை.

கிறிஸ்துவே சபைக்குத் தலைவராயிருக்கிறார் என்று வசனம் போதிக்கிறது. பின்வரும் வசனங்களை ஆராய்வோமாக, "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே. 1:22,23). "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்." (எபேசியர் 5:23). "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த

முதற்பேறுமானவர்". (கொலோ.1:18). இந்த வசனங்கள் நமக்குப் போதிப்பது என்ன? ஏற்கனவே குறிப்பிட்டபடி, கிறிஸ்து சபையாகிய சரீரத்துக்கு தலையாயிருக்கிறார். எத்தனை தலைகள் உள்ளன ? ஒரே தலை. அந்த ஒரே தலை கிறிஸ்து. அவர் அந்த ஸ்தானத்தை ஒருவரோடும் பகிர்ந்து கொள்வதில்லை.

சபை அநேக பிராந்திய (உள்ளூர்/பகுதி) சபைகளையும், கிறிஸ்துவையே தலையாகவும் கொண்டுள்ளது. அதாவது அவரே ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் தலையாயிருக்கிறார்; அதுபோலவே சபையில் உள்ள ஒவ்வொரு தனித்தனி அங்கத்தினர்களுக்கும் அவர் தலையாயிருக்கிறார். இதைக் கொண்டுதான் பவுலும், "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்" என்று எழுதுகிறார் **(11 கொரி. 11:3).**

அடுத்து, ஒவ்வொரு பிராந்திய சபையும், தனது சொந்த ஆளுகை (நிர்வாக) அமைப்பைப் பெற்றிருக்க வேண்டும். பிறகு கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு, அங்கத்தினர்களிலிருந்து மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் நியமித்து சபையின் ஆவிக்குரிய, மற்றும் சரீரத் தேவைகளைக் குறித்து கவனம் செலுத்த வேண்டும். மூப்பர்கள் அங்கத்தினர்களின் ஆத்துமாக்களைக் குறித்து விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும் **(எபி. 13:7).** உதவிக்காரர்கள் மாம்சத்திற்குரிய காரியங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும் **(அப்போஸ்தலர் 6).** ஒவ்வொரு பிராந்திய சபையிலும், மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் பன்மையிலேயே வேத வசனம் பேசுகிறது. ஒரு மூப்பரோ அல்லது ஒரு உதவிக்காரரோ அவர்களை ஆளும்படி நியமிக்கப்படுவதில்லை என்பதைக் கவனிக்கவும்; அல்லது ஒரு பிராந்திய சபையில் இருக்கும் மூப்பர்களும்,

உதவிக்காரர்களும் மற்றொரு பிராந்திய சபையின் மீது கட்டுப்பாடு விதிக்க இயலாது. பிராந்திய சபைகள் ஒன்றுக்கொன்று ஐக்கியம் கொண்டிருக்கலாமேயன்றி, ஒன்றின் மீது மற்றொன்று ஆதிக்கம் செலுத்த இயலாது.

மூப்பர், மேய்ப்பர், (பாஸ்டர், செப்பர்டு) கண்காணி (பிஷப், பிரிஸ்பட்டர்) ஆகிய அனைத்து வார்த்தைகளும் ஒரே அலுவலையே குறிக்கும். இப்படியாக, ஒரு மூப்பரே மேய்ப்பராகவும் (பாஸ்டர்) கண்காணியாகவும் (பிஷப்பாகவும்) இருக்கிறார். 1 **தீமோத்தேயு. 3:1–7ல்** பவுல் இவர்களுக்குரிய அநேக தகுதியாம்சங்களைக் குறிப்பிடுகிறார். "கண்காணிப்பை விரும்புகிறவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதை உள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்க வேண்டும். அவன் மதுபான பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசை இல்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளை நல்லொழுக்கமுள்ளவர்களாய் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்". இந்த தகுதியாம்சங்கள் **தீத்து 1:5–9லும்** குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, சபையிலே ஒவ்வொருவரும் மூப்பராக இருக்க முடியாது. தகுதிபெற்றவர்கள் மாத்திரமே, அதுவும் (ஒரு பிராந்திய சபையில்) ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களே மூப்பர்களாக நியமிக்கப்பட வேண்டும். மூப்பர்களுக்குரிய தகுதி பெறாத பிராந்திய சபைகள் இருக்குமாயின், அந்தந்த

சபைகளின் ஆண் அங்கத்தினர்கள், மூப்பர்கள் நியமனம் செய்கிற அளவுக்கு வளர்ச்சி அடையும் வரை, சபையின் காரியங்களை கவனித்துக்கொள்ளவேண்டும்.

மூப்பர்களுடன் ஊழியம் செய்யத்தக்க வகையில் உதவிக்காரர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவர்களும் ஊழியர்களாக இருப்பதால், பிராந்திய சபை மூப்பர்களின் வழிகாட்டுதலின்பேரில் ஊழியம் செய்ய வேண்டும். பவுல் அவர்களின் தகுதியாம்சங்களைப் பட்டியலிட்டு காட்டுகிறதாவது. "அந்தப்படியே, உதவிக்காரர்களும் இரு நாக்குள்ளவர்களாயும், மதுபானப் பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனசாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும். மேலும் இவர்கள் முன்னதாக சோதிக்கப்படவேண்டும். குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும், நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களாயுமிருக்க வேண்டும். மேலும் உதவிக்காரரானவர்கள், ஒரே மனைவியை உடைய புருஷராய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும். இப்படி உதவிக்காரர்களுடைய ஊழியத்தை நன்றாய் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்". **(1 தீமோ. 3:8–13).**

இதுவே சபையின் தெய்வீக ஆளுகை அமைப்பு, கிறிஸ்து இதற்குத் தலையாயும், ஒவ்வொரு பிராந்திய சபையும் தங்கள் மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் கொண்டு அமைவு பெறுகிறது. அவர்களின் அதிகாரத்தின் கீழ், பிரசங்கிமார்களும், போதகர்களும், அங்கத்தினர்களும்

ஊழியஞ்செய்கின்றனர். கர்த்தருடைய நாளிலே, ஒரு பிராந்திய சபை இடறி விழுந்தாலும் பிற பிராந்திய சபைகள் தொடர்ந்து விசுவாசத்திலே நிலைத்திருக்கக் கூடும் அல்லது ஒரு பிராந்திய சபையை விடுத்து அனைத்து பிற பிராந்திய சபைகளும் வழுவிப்போனாலும், அந்த ஒரு பிராந்திய சபையாகிலும் விசுவாசத்தில் தரித்திருக்கும். கர்த்தருடைய ஆளுகை அமைப்புத் திட்டத்தின்படி, ஒவ்வொரு பிராந்திய சபையும் பிற பிராந்தியங்களிலிருந்து தன்னாட்சி அல்லது சுயாட்சி அமைப்பைப் பெற்றவை. அவைகள் மனிதனால் இயற்றப்பட்ட சட்டங்களினாலே அல்ல, ஆனால் அன்பினாலே கட்டப்பட்டிருக்கும். அதினால் அவைகள் ஒன்றுக்கொன்று ஐக்கியத்திலும், ஒன்றாக இணைந்து ஊழியஞ்செய்வதிலும், கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாட்டில் இணைந்திருக்கவும் செய்யும். அவரது வழி மேற்கொண்டு கூட்டப்பட வேண்டியதில்லை.

சபைக்கு பேதுருவோ, வேறு எந்த மனிதனுமோ தலைவராக செயலாற்றியதாக வேத வசனங்களில் எங்குமே நாம் வாசிப்பதில்லை. ஒரு கண்காணி (பிஷப்) அநேக பிராந்திய சபைகளுக்கு மேலாக ஆட்சி செலுத்தினதையோ அல்லது ஒரு 'பாஸ்டர்' (பிரசங்கியார்) ஒரு சபைக்கு தலைவராகப் பணியாற்றியதாகவோ நீங்கள் வசனங்களில் வாசிக்க இயலாது. மதத்தலைவர்களென்றோ (சபை குருமார்கள்), சமய அறிவு பெறாத பொதுமக்க ளென்றோ நீங்கள் வாசிக்க இயலாது. இன்றுள்ள மத உலகில் தேவன் கொடுத்த சபையின் ஆளுகை அமைப்பிலிருந்து வழுவிப்போனதே, உலகின் அநேகப் பிரிவினைகளுக்கு ஒரு காரணமாகும். எனவே வேதாகம சபையின் ஆளுகை அமைப்பின் உண்மையான முன்மாதிரிக்குத் திரும்ப தீர்மானம் செய்வோமாக.

# சபைக்குள் நுழைவு
# Entering the Church

நமது படிப்பில் இதுவரை சபையின் முக்கியத்துவத்தைப்பற்றி பார்த்தோம். கிறிஸ்து சபைக்காக மரித்தார் என்னும் வேத வசனங்கள் இதற்கு ஆதாரமாக இருக்கிறது (எபே. 5:25): மேலும், அவர் தமது சுய இரத்தத்தினாலே அதைக் கிரயத்திற்கு வாங்கினார் என்பதையும் (அப். 20:28), அவரே அதற்கு இரட்சகராயிருக்கிறார் என்பதையும் (எபே. 5:23) அறிகிறோம். முக்கியமில்லாத ஒன்றிற்காகவா கிறிஸ்து மரித்தார்? என்றதைப் போல கீழ்வரும் கேள்விகளும் உள்ளன.

உபயோகமற்ற சபைக்காகவா அவர் இரத்தம் சிந்தினார்? அதற்குப் புறம்பே ஒருவர் இரட்சிப்படைந்தால், அவரே அதற்கு இரட்சகராயிருக்க முடியுமா? இந்த ஒவ்வொரு கேள்விக்கும் 'இல்லை' என்ற பதிலையே நீங்கள் சொல்லக்கூடும். அப்படியாயின், பின்னே ஏன் சபை முக்கியமில்லை என்றும், அதற்குள் அங்கமாகாமலேயே ஒருவர் இரட்சிக்கப்பட முடியும் என்றும் சொல்லப்படுகிறது? அப்படிப்பட்ட மக்கள் சபையைத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதால் இப்படியாக வஞ்சிக்கப்பட்டிருக்கின்றனர்.

நிச்சயமாகவே, சபைதான் 'இரட்சகர்' என்று வேதாகமம் போதிப்பதில்லை; ஆனால் அதே நேரத்தில் ஒருவர் இரட்சிக்கப்பட சபைக்குள் இருக்கவேண்டும் என்று போதிக்கிறது. எப்படி நோவா காலத்து பேழை இரட்சகராயிராமல், நோவாவும் குடும்பமும் ஜலப்பிரளயத்திலிருந்து காக்கப்பட பேழைக்குள் இருக்கவேண்டியது அவசியமாயிருந்ததோ, அது போலவே தான் சபையும், ஒருவர்

இரட்சிக்கப்படும்போது கர்த்தர் அவரை சபையில் சேர்க்கிறார். பெந்தகோஸ்தே நாளிலும் அதைத் தொடர்ந்து வந்த நாட்களிலும், "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" **(அப். 2:47)** என்று பதிவுகள் கூறுகின்றன. எனவே, ஒருவர் இரட்சிக்கப்பட்டால், அவர் கர்த்தருடைய சபையின் அங்கமாக இருக்கிறார். அவர் அங்கமாகாவிட்டால், அவர் இரட்சிக்கப்படமாட்டார். இது அவ்வளவு எளிமையாய் புரிந்து கொள்ளத்தக்கது. இன்னொரு வார்த்தையில் சொன்னால், பிரிவினைக் கூட்டத்தில் அங்கம் வகிக்காமலும், மனிதர்களின் பிரிவுக் கூட்டங்களில் சேராமலும் இரட்சிக்கப்பட முடியும்; ஆகிலும் அவர் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராகாமல் இரட்சிக்கப்பட இயலாது.

நாம் தொடர்ந்து படிக்கும்போது, ஒருவர் கர்த்தருடைய சபையில் தான் விரும்புவதால் மட்டுமே சேர இயலாது. மாறாக, கர்த்தர் அவரை சபையில் சேர்க்கிறார். இரட்சிக்கப்பட்டவர்களை மாத்திரமே அவர் சபையில் சேர்ப்பதால், சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமைப்பாகும். ஒரு மனிதன் நேர்மையாக உண்மையிலேயே கீழ்ப்படிகிறாரா என்பதை உறுதிப்படுத்தத்தக்க வகையில், கர்த்தர் இருதயங்களையும், எண்ணங்களையும் பார்க்கிறார். அவர் உண்மையுள்ளவராயிருப்பின், தேவன் அவரைச் சபையில் சேர்க்கின்றார். அவர் உண்மையில்லாதவராயின், பிறகு நாம் அவரை ஏற்றுக் கொண்டாலும், தேவனால் அவர் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை; ஏனெனில், அவர் புறத்தோற்றமான கீழ்ப்படிதலைக் காட்டுவதால், நாம் அவரின் இருதயத்தைக் காண இயலாது. ஒருவர் சபையிலே சேர்த்துக் கொள்ளப்படுவாராகில், எப்படிப்பட்ட எண்ணமுள்ளவராயினும், பிற யாவரும் அவரை ஏற்றுக்கொள்வார்கள். இதனால் தான் சபையின் சேர்க்கைக்கு கர்த்தரே பொறுப்பானவராயிருக்கிறார். இரட்சிக்கப்பட்டவர்களுக்குள் யார் இருக்க வேண்டும் என்பதையும், முறைப்படி யார் சபைக்குள் நுழைந்துள்ளனர் என்பதையும் தீர்மானிப்பதில் அவர் தவறு செய்வதில்லை.

கிறிஸ்துவே சபைக்கு இரட்சகராயிருப்பதாலும், அவரே இரட்சிக்கப்பட்டவர்களை சபையில் சேர்க்கிறார் என்பதாலும், சபைக்குள் நுழைவு பெற ஒருவரிடத்தில் கர்த்தர் என்னத்தை எதிர்பார்க்கிறார் என்று ஒருவர் அறிய விரும்புவது இயற்கையே ! இது தேவனுடைய வசனத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. நற்செய்தியாக அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் உள்ள அநேக மனமாற்ற நிகழ்ச்சிகளில் இது தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆனால், கர்த்தருடைய சபையில் நுழைவு பெற ஏதுவான நிபந்தனைகள் அல்லது படிகளைக் குறிப்பாகக் கவனிக்கவும்.

**1. ஒருவர் சத்தியத்தை கேட்க வேண்டும்,** "ஆதலால் விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும்". **(ரோமர். 10:17).**

**2. அவர் தேவன் மேலும் கிறிஸ்துவின் மேலும் விசுவாசம் வைக்க வேண்டும்.** "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் ; ஏனெனில் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலனளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்" **(எபி. 11:6).** கிறிஸ்து சொன்னார் "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்". **(யோ.14:1)**

**3. அவர் தமது பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும்.** "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" **(லூக் 13:3)**

**4. கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அவர் அறிக்கை செய்ய வேண்டும்.** கிறிஸ்து தாமே சொன்னார், "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை

பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்," **(மத். 10:32).**

**5. அவர் தனது பாவ மன்னிப்பிற்காக 'திருமுழுக்கு' பெறவேண்டும்.** திருமுழுக்கு (ஞானஸ்நானம்) என்பது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் **(ரோ.6:3,4: அப். 8:26–39).** "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்." **(மாற்கு. 16:16).** "பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றான் **(அப்.2:38).**

இந்தப் பாடத்தில் முதலில் எவைகளைக் கற்றுக் கொண்டோம்? இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்த்துக் கொள்கிறார் என்று கண்டோம். இதன் பொருள், ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்படும்போது, அவர் தாமாகவே சபையிலே சேர்த்துக் கொள்ளப்படுகிறார். சத்தியத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, திருமுழுக்கு பெற்றால், ஒருவர் இரட்சிக்கப்படுவார் என்று இப்பொழுது தான் பார்த்தோம். இப்படியாக, தனிப்பட்ட ஒவ்வொருவரும் செய்யும்போது, அவர்களை அவர் (கிறிஸ்து) சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார். இது எளிமையானதல்லவா?

இதை வேறுவகையில் சொல்ல வேண்டுமானால், ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பதன் மூலமே ஒருவர் தேவனுடைய இராஜ்யத்திற்குள் (அரசாட்சி) பிரவேசிக்க முடியும். ஆனால் இராஜ்யம் (அரசு) என்பது என்ன ? அதுவே சபை **(மத். 16:18, 19).** சபையில் ஒருவர் நுழைய (அல்லது பிரவேசிக்க)

கர்த்தர் இரண்டு விதமான வழிகளை வைத்துள்ளாரா ? நிச்சயமாக இல்லை ! ஆதலால், ஒருவர் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெறும்போது, ஒருவர் கர்த்தருடைய சபையாகிய தேவனுடைய இராஜ்யம் (அரசு) அல்லது தேவனுடைய குடும்பத்திற்குள் பிறக்கிறார்.

மீண்டும் பவுல் கூறும்போது, நாம் எல்லோரும் ஒரே சரீரத்திற்குள் திருமுழுக்கு பண்ணப்பட்டோம் என்று கூறுகிறார் **(1 கொரி 12:13):** ஆனால் சரீரம் என்பது என்ன ? அதுதான் சபை **(கொ.1:18).** எத்தனை (சரீரங்கள்) உள்ளன ? ஒன்றே ஒன்று, **(எபே.4:4; எபே. 1:22, 23).** ஒருவன் எப்படி அதற்குள் நுழைய முடியும்? திருமுழுக்கு பண்ணப்படுவதன் மூலம். ஆனால் இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற வேண்டும் என கிறிஸ்து கூறுகிறார் **(மாற்கு 16:16)** நல்லது இதைத்தான் கொரிந்தியர்கள் செய்தனர் **(அப். 18:8).** அப்படியானால் ஒருவர் திருமுழுக்குப் பெறும்போது சபையில் அங்கமாகிறார். அல்லது அதில் சேர்க்கப்படுகிறார். நாம் பார்த்ததின்படி, இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழிதான் உண்டு; மேலும் இரட்சிக்கப்பட்டவர்களை கிறிஸ்து சபையிலே சேர்க்கிறார். நீங்கள், வேதாகமத்தில் வாசிக்கிற அந்த சபையின் அங்கத்தினரா? நீங்கள்? இல்லையென்பது உங்கள் பதிலானால், நீங்கள் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. யோசியுங்கள், ஆராயுங்கள் மற்றும் ஆண்டவருக்குக் கீழ்ப்படியுங்கள்; கர்த்தரே தனிப்பட்ட முறையில் உங்களை அவருடைய சபையிலே சேர்ப்பார்.

# சபையின் ஆராதனை (தொழுகை)
# Worship of the Church

சபை இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டு அமைவு பெற்றது. இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனைத் தொழுதுகொள்வதும் அவருக்கு வேலை செய்வதும் அதன் நோக்கமாகும். "வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" **(கொலோ. 3:17).**

புதிய ஏற்பாட்டில் மூன்று விதமான தொழுகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. **முதலாவதாக, 'அறியாமையின் ஆராதனையைக்'** குறித்து நாம் வாசிக்கிறோம். பவுல் அத்தேனே பட்டணத்திலுள்ள மார்ஸ் மேடையில் இருந்தபொழுது, தன்னை சுற்றிலுமிருந்த விக்கிரகங்களையெல்லாம் கவனித்து பார்த்த பின், கூறியதாவது: "எப்படியெனில் நான் சுற்றித்திரிந்து, உங்கள் தொழுகைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்த பொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்." **(அப். 17:23)** . அன்றைக்கு எப்படி அறியாமல் தொழுது கொண்டவர்கள் இருந்தார்களோ, அப்படியே இன்றைக்கும் அநேகர் உள்ளனர். இன்று இலட்சக்கணக்கானோர் விக்கிரகங்களுக்கும் சொரூபங்களுக்கும் முன்பாக பணிந்து குனிவதோடு மட்டுமன்றி, வசனத்தை அறியாமல் அநேக மார்க்கப் பிரிவினரும் கூட பல்வேறு மத சடங்குகளை கடைபிடித்தும் அப்படிச்

செய்கின்றனர். **இரண்டாவதாக, வீணான தொழுகை** செய்வோரைக் குறித்தும் கர்த்தருடைய வசனம் பேசுகிறது. "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" என்று கிறிஸ்து சொன்னார் (**மத். 15:9**). பெரும்பாலான ஜனங்கள் இன்று இப்படியாக தொழுகின்றனர். அவர்கள் கர்த்தரை தொழுது கொள்கின்றனர் என்பது உண்மைதான்; ஆனாலும், தேவனுடைய சித்தத்தின்படியிராமல், மனுஷருடைய உபதேசங்களையும், பாரம்பரியங்களையும் கொண்டவைகளாக அவைகள் இருப்பதால், அவர்களுடைய தொழுகை வீணானது. **மூன்றாவதாக, ஆவியோடும், சத்தியத்தோடும் கூடிய உண்மை தொழுகையை** தேவனுடைய வசனம் பேசுகிறது. நாம் கிறிஸ்துவின் வார்த்தைகளை இப்படியாக வாசிக்கிறோம். "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்." (**யோ. 4:24**). இவ்வகை ஆராதனையை மட்டுமே தேவன் ஏற்றுக்கொள்வார். இது கிறிஸ்துவின் நாளிலும் உண்மையாயிருந்தது; இன்றைக்கும் உண்மையாயிருக்கிறது. இந்த தொழுகை தேவனால் வழிகாட்டப்பட்டுள்ள முறையாகிய ஆவியோடும் (சத்தியத்தோடும்), உண்மையோடும் (எழுதப்பட்டிருக்கிறபடி), தொழுது கொள்ளுதலாகும். தேவன் தம்மைத் தொழுது கொள்ளும்படி யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் அவரைத் தொழுது கொள்பவர்கள், தேவன் சொன்னபடியே தொழுது கொள்ளுதல் அவசியம்.

கர்த்தருடைய சபை எந்த வகை தொழுகையில் நிலைத்திருக்க வேண்டும்?

அறியாமையின் தொழுகையில் நிச்சயமாக இல்லை. மனுஷருடைய கற்பனையின் படியும், உபதேசங்களின்படியும் கூட இல்லை. மாறாக, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க வகையில் ஆவியோடும் உண்மையோடும் இருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டு பக்கங்களை நாம் திருப்பும்போது, தேவனுடைய நேரடிக் கட்டளை, மற்றும் சபை தரித்திருந்த தொழுகையின் ஐந்து பாகங்களைக் குறித்த முன் மாதிரிகளையும் நாம் அறிகிறோம்.

1. **அவர்கள் ஒன்று கூடி வேத வசனங்களைக் கற்றனர்.** தீமோத்தேயுவுக்கு தனது இளம்வயது முதலே வசனம் கற்பிக்கப்பட்டிருந்த போதிலும் (2 தீமோ 3:15), வாலிப பிரசங்கியாராகிய அவனுக்கு பவுல் அறிவுறுத்திக் கூறும்போது, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும், உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு". என்றார். (11 தீமோ. 2:15). அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் விசேஷமாக தொழுகைக்குக் கூடிவரும்போது இது பொருந்தும். அப். 20:7-ல் வேத வசனத்தை ஆராயும் பவுல், சகோதரர்களுக்கு பிரசங்கிப்பதைக் காண்கிறோம்.

2. **அவர்கள் ஜெபித்தார்கள்:** பெந்தகோஸ்தே நாளில் ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த பின், அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்

**பண்ணுதலிலும்** உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என்று வாசிக்கிறோம், **(அப்.2:42).** கர்த்தருடைய பிள்ளைகள் ஜெபத்தின் மூலம் பரலோகப் பிதாவினிடத்தில் பேசுகிற வாய்ப்பைப் பெறுகின்றனர். பிற கிறிஸ்தவர்களுடன் கூடிவரும் ஒரு கிறிஸ்தவன், ஜெபிக்காமலிருப்பதை என்னவென்று சொல்லுவது?

3. **அவர்கள் துதித்துப் பாடினார்கள் :** பவுல் கிறிஸ்துவுக்குள்ளான தனது சகோதரர்களுக்கு எழுதும்போது, "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி" **(எபே. 5:19)** என்று எழுதுகிறார். **கொலே. 3:16யும், எபி.13:15–யும்** இத்துடன் வாசிக்கவும். இரண்டு வகை இசைகள் உண்டு. ஒன்று குரலிசை மற்றொன்று வாத்தியக்கருவி இசை. தேவன் எப்படிப்பட்ட இசையை விரும்புகிறார்? அவர் குரலிசையையே விரும்புகிறார் ? இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ண வேண்டுமென்று பவுல் கூறுகிறார். இது வாத்தியக் கருவியிலிருந்து வருகின்ற இசையை நிராகரிக்கிறது. ஆதிக் கிறிஸ்தவர்கள் தேவனுக்கு துதிகளைச் செலுத்திப் பாடினார்கள். நூற்றாண்டுகளுக்குப் பிறகு இசைக்கருவிகளை மனிதன் சேர்த்தானேயன்றி, தேவன் அதைக் கட்டளையிடவுமில்லை, அதை ஏற்றுக் கொள்வதுமில்லை. இயந்திரத்தனமான ஜெபத்தால் தேவனைத் துதிப்பது எப்படி இயலாததோ, அப்படியே இசைக்கருவியுடன் பாடுகிற பாடலினால் தேவனைத் துதிக்கவும் இயலாது.

4. **கர்த்தருடைய பந்தியிலே பங்குபெறும்படி அவர்கள் கூடிவந்தனர்: அப். 20:7**-ல் நாம் இதற்கான முன்மாதிரியைக் காண்கிறோம். **மத். 26:26-28**லும் **1 கொரி. 10:16,**-லும் கிறிஸ்துவின் சரீரத்தை நினைவு கூறத்தக்க வகையில் அப்பத்திலும், கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூறத்தக்கதாக திராட்சைப்பழ இரசத்திலும் பங்கு பெற வேண்டும். கிறிஸ்துவின் வருகைநாள் வரை, நாம் இதைத் தொடர்ந்து செய்தல் அவசியம்.

5. **அவர்கள் தங்கள் பணத்தைக் கொடுத்தார்கள்** : பவுல் கலாத்தியா மற்றும் கொரிந்து பட்டணத்திலிருந்த சகோதரர்களுக்கு கட்டளையிட்டு, “நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்” என்று சொன்னார். **(1 கொரி. 16:2). 2 கொரி. 9:7-யும்** வாசிக்கவும்.

ஆதி கிறிஸ்தவர்கள் தேவனைத் தொழுதுகொள்ளும்படி ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள்தோறும் கூடிவந்தார்கள், **(அப். 20:7, 1 கொரி. 16:2).** “சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்திசொல்லவேண்டும்.” என்று அவர்கள் எச்சரிக்கப்பட்டார்கள் **(எபி. 10:25).** இன்று கிறிஸ்தவர்கள் அதே மாதிரியான முறைமைகளையும், தொழுகை

தினத்தையும் கைக்கொள்ள வேண்டியதால், அதே மாதிரியான அறிவுரையையும் பெற வேண்டியவர்கள்.

சபையின் தொழுகை மிகவும் எளிமையானது; ஆனால் அந்த எளிமையே அநேகருக்கு இடறுதலாக காணப்படுகிறது. அவர்களோ, பாரம்பரியங்களையும், சடங்காச்சாரங்களையும் கொண்ட மாற்றங்களற்ற, திரும்பத் திரும்ப ஜெபத்தை அலப்பிக் கொண்டிருக்கிற ஒரு நெடிய (கடினமான) காரியமாகத் தொழுகையைக் காணுகின்றனர். ஆனால் தொழுகை அப்படிப்பட்டதல்ல. தொழுகையைக் குறித்த தமது சித்தத்தை தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார்; ஆதலால் மனிதன் அதை சிறிதேனும் மாற்றியமைக்கும் வகையில் கொடுக்கப்படவில்லை. அப்படிச் செய்வோர், அதனுடன் ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ செய்து, அதன்மேல் கூறப்படும் சாபக்கேட்டை தங்கள் மீது வரவழைத்துக் கொள்கின்றனர். (வெளி **22:18,19**) தேவன் பேசியிருக்கிறார், ஆதலால் அவருடைய ஜனங்கள் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் தேவன் ஆராதிக்கப்படுவார், துதிக்கப்படுவார், மற்றும் கனப்படுத்தப்படுவார்.

# சபையின் வேலைகள் (ஊழியம்)
# Work of the Church

சபை ஏன் நிலைத்திருக்கிறது ? அதன் நோக்கம் என்ன ? அதன் ஊழியம் என்ன ? இதை அறிந்து கொள்ள, தேவனுடைய வசனத்திற்குச் செல்லுவோம்.

முதலாவதாக, சபையானது உலகப்பிரகாரமான வியாபாரத்தையோ, பள்ளிக்கூடம் மற்றும் மருத்துவமனை முதலியவற்றை நடத்துவதையோ செய்யக்கூடாது என்பதைக் காணவேண்டும். பணத்தை சம்பாதிக்கின்ற ஒரு பதிப்பகமாகவோ, புத்தகங்களை விற்கின்ற ஸ்தாபனமாகவோ அது செயல்பட்டு விடக்கூடாது. இவைகளெல்லாம் ஒரு வேளை நல்லவைகளாயிருந்தாலும், தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் இதிலே தரித்திருப்பது சரியானதாக இருந்தாலும், இது சபையின் பணியல்ல. இப்படிப்பட்ட அலுவல்களைச் செய்ய மார்க்க உலகம், மேலும் கவனத்தைச் செலுத்தும்போது, தேவன் வேதாகமத்தில் தமது மக்களுக்காக வைத்த திட்டத்தின் நோக்கத்திலிருந்து வழுவிப்போகும் மற்றொருபடியாகும்.

தேவனுடைய வசனங்களில் கவனத்தை திருப்பும்போது, சபையில் மூன்று வித வேலைகளைக் காண்கிறோம்: முறையே நற்செய்தியைப் பிரசங்கித்தல், தேவையுடையோருக்கு உதவுதல், சபையை பக்தி விருத்தியடையச் செய்தல் என்பவைகள்; அவைகளை ஒவ்வொன்றாக காண்போமாக.

**1. நற்செய்தியைப் பிரசங்கித்தல்:**

கிறிஸ்து உயிர்த்தெழுந்தவுடன், பரலோகத்திற்கு ஏறிப்போவதற்கு முன், தமது அப்போஸ்தலர்களிடம் போதித்ததாவது; "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்." **(மத். 28:19, 20).** "பின்பு அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும்போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிஷேத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" **(மாற்கு. 16:15, 16).** பின்னதாக பவுல், வாலிபனாகிய தீமோத்தேயுக்கு, "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்து கொண்டு புத்தி சொல்லு", என்று புத்தி சொன்னார் **(2 தீமோ. 4:2).** இன்னும் பிற வசனங்களையும் குறிப்பிடலாம்; ஆனால் திருமுழுக்கு பிரசங்கிக்கப்படவேண்டும் என்ற கர்த்தருடைய அடிப்படை விருப்பத்தை மேற்குறித்த வசனங்கள் தெளிவாக்குகின்றன.

அப்போஸ்தலர்கள் காலத்தில் சபை என்ன செய்தது? கர்த்தர் தங்களை என்னசெய்ய வேண்டும்? என்று கேட்டாரோ, அதையே அங்கத்தினர்கள் செய்தனர். அவர்கள் வசனத்தை பிரசங்கித்தனர். உதாரணமாக அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம், இதைப் போன்ற உதாரணங்களைக் கொண்டுள்ளது. அனைத்து மனமாற்ற நிகழ்ச்சிகளிலும், கர்த்தருடைய சித்தத்தை பிரசங்கியார்

போதித்தார் (அப். 2,8,9,10 மற்றும் 16–ம் அதிகாரங்களை வாசித்துப் பாருங்கள்). ஆனால், யாரெல்லாம் பிரசங்கிக்கவும் போதிக்கவும் செய்தனர்? எருசலேமிலே கர்த்தருடைய ஜனங்கள் மீது பெரிய உபத்திரவம் வந்தபோது, "சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து நற்செய்தியைப் பிரசங்கித்தனர்" என்று வேதம் சொல்லுகிறது (அப். 8:4).

அடுத்தபடி, அவர்கள் எதைப் பிரசங்கித்தனர்? மறுபடியும் நீங்கள் செய்யவேண்டியது என்னவெனில், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் உள்ள மனமாற்ற நிகழ்ச்சிகளை உங்களுக்கு நீங்களே வாசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். ஆனால் சுருங்கச் சொல்லின், அவர்கள் கிறிஸ்துவின் தெய்வீகம், ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்? சபையின் முக்கியத்துவம், தொழுகையின் பாகங்கள், கிறிஸ்தவ ஜீவியத்தின் முக்கியத்துவம் ஆகிய அனைத்தையும் போதித்தனர். பவுல் இதை சுருக்கமாகச் சொல்லும்போது, "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" (1 கொரி. 1:18) என்றார்.

தமது வசனம் பிரசங்கிக்கப்பட வேண்டும் என கர்த்தர் கட்டளையிட்டிருப்பதோடு, பவுலும் தேவனுடைய வசனத்தைக் கேட்பதினால் விசுவாசம் வருகிறது என்று கூறுகிறார் (ரோ. 10:17). மேலும் கிறிஸ்து கூறுகையில் "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோ.8:32). என்றார். "அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்வார்கள் ? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?" (ரோ.10:14). இவைகள் எல்லாவற்றையும் சுருக்கமாகச்

சொன்னால், மனிதன் (ஆன்மாவிலே) இழந்து போனவன் (ரோ. 3:23: ரோ.6:23), ஆதலால் தேவனுடைய அன்பு, அவனுக்கு பிரசங்கிக்கப்பட வேண்டும்; மனிதனுக்கு ஒரு இரட்சகர் இருக்கிறார் என்றும் (யோ 3:16): தேவனுக்கு கீழ்ப்படிவதன் மூலம், மனிதன் பாவத்திலிருந்து விடுதலை பெற முடியும் என்றும் காண்பிக்கப்பட வேண்டும் (ரோ.1:16,17: மாற். 16:15, 16). தேவனுடைய சித்தத்தை அறியாதவர்களும், கீழ்ப்படியாதவர்களும் இரட்சிப்பை இழந்து போவார்கள் (2தெச. 1:7–9). இப்படியாக தேவனுடைய வசனம் பிரசங்கிக்கப்பட வேண்டும்.

**2. தரித்திரருக்கு உதவுதல்:**

தேவையுடையவர்களைக்குறித்து சபையானது அக்கறை கொள்ளவும், தங்கள் திராணிக்குத்தக்க வகையில் உதவவும், கர்த்தருடைய வசனத்தில் நமக்கு முன்மாதிரி காட்டப்பட்டுள்ளது. **அப். 2:45–ல்** "காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்" என்று சொல்லப்படுகிறது. இது மனமுவந்து கொடுக்கப்பட்டது. மேலும் **அப்போஸ்தலர்6–ம்** அதிகாரத்தில் கிரேக்க விதவைகள், அன்றாட விசாரணையில் சரியாக கவனிக்கப்படவில்லை என்பதைக் குறித்து, கிரேக்கர்களுக்கும் எபிரேயர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சனையை நாம் காண்கிறோம். ஆதலால் அப்போஸ்தலர்கள் சீஷர்களை வரவழைத்து, ஏழு மனிதர்களை அவர்களுக்குள் நியமித்து, சபையின் இப்படிப்பட்ட காரியங்களைக் கவனித்துக் கொள்ளச் செய்தனர்.

எருசலேமிலுள்ள ஏழை பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யும்பொருட்டு பவுல் சொல்வதைக் காண்கிறோம். அவர் தொடர்ந்து கூறும்போது, "மக்கதோனியாவிலும், அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள்சகாயம் செய்ய விருப்பங்கொண்டிருக்கிறார்கள்" என்றார் **(ரோ. 15:25, 26).** கொரிந்து பட்டணத்து சகோதரர்களுக்கும் பவுல் எழுதும்போது, "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச்சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக்கடவன்" **(1 கொரி 16:1,2)** என்றார்.

யாருக்கு உதவி செய்யப்படவேண்டும்? இயல்பாகவே, சபையிலுள்ள தேவையுடையோருக்கு முதல்கவனம் செலுத்தப்பட வேண்டும். அதாவது, ஏழைகள், வயதானோர், விதவைகள், அவசர கால தேவையுடையோர், அனாதைகளான கிறிஸ்தவர்கள் போன்றோருக்கு உதவிட வேண்டும். "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" என்று வாசிக்கிறோம் **(கலா.6:10).** ஆனால் எல்லோருக்கும் உதவி செய்யப்பட வேண்டும் என்பதில்லை. **1தீமோ. 5:4—ல்** தனக்குத் தானே உதவி செய்துகொள்ள இயலாதவருக்கு உதவ வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது; அவர்களுக்கு உதவி செய்ய யாரும் இல்லாத போதும், அந்த நபர் விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக தன்னை நிரூபிக்கவும் வேண்டும்.

ஆதலால் கர்த்தருடைய பணம், கேட்போருக்கெல்லாம் எடுத்துக் கொடுத்துக் கொண்டிராமல், வித்தியாசம் கண்டுபிடித்து கொடுக்கப்பட வேண்டும்.

சபை அங்கத்தினர்களுக்கு மாத்திரம் உதவி செய்யாமல், சபையின் திராணிக்கேற்ப, உதவி தேவைப்படும் அனைத்து மக்களுக்கும் உதவ வேண்டும் **(யாக். 1:27–ஐயும் யாக். 2–ம்** அதிகாரத்தையும் வாசிக்கவும்). சுவிசேஷத்தைக் கொண்டு ஜனங்களை அணுக இது ஒரு வாய்ப்பாக அமையும்.

இப்படிப்பட்ட ஊழியத்திற்கு நிதி உதவி எங்கிருந்து வரும்? அங்கத்தினர்கள் மனமுவந்து அளிக்கும் காணிக்கை மூலமே **(1 கொரி. 16:1, 2 கொரி. 9:6,7),** அதாவது அங்கத்தினர்கள் கொடுக்கத்தவறினால், சபை தேவையுடையோரின் துயர்துடைக்க உதவி செய்ய இயலாது.

**3. சபை பக்தி விருத்தியடைதல் வேண்டும் :**

பக்திவிருத்தி அடையச் செய்தல் என்றால், சபையைக் கட்டுவது, பெலப்படுத்துவது, உற்சாகப்படுத்துவது, அங்கத்தினர்களை ஆவிக்குரிய ரீதியில் வளர்ச்சியடையச் செய்வது என்று பொருள். பக்தி விருத்தியடையச் செய்கிற சில காரியங்கள் யாவை? தேவ வசனம், ஐக்கியம், தொழுகையில் தரித்திருத்தல், ஒருவருக்கொருவர் உதவி செய்தல், நற்கிரியைகள், அன்பு போன்றவை **(அப்.9:31, ரோமர். 14:19: 1 கொரி. 8:1: 1 தெச. 5:11: 1 கொரி. 14:26: 2 கொரி. 12:19, மற்றும் எபே. 4:12** ஆகியவற்றை வாசிக்கவும்).

இறுதியாக, உலகளாவிய அமைப்பை சபை பெறாமலும், மனித தலைமைத்துவம் இல்லாமலும், சபை இப்படிப்பட்ட பணிகளை எப்படி செயலாற்றக் கூடும்? என அநேகர் ஆச்சரியப்படுகின்றனர். ஆனால் கர்த்தருடைய வழியே சிறந்த வழி, அவரது பணியைச் செய்ய உண்டாயிருக்கும் ஒரே வழி. நாம் இங்கிருப்பதன் நோக்கத்தை நிறைவேற்ற ஏதுவாக தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்; அப்பொழுது தான் தேவன் துதிக்கப்பட்டு, கனப்படுத்தப்பட்டு, மகிமைப்படுவார். கிறிஸ்து சபைக்கு தலையாகவும், ஒவ்வொரு பிராந்திய சபையும், ஒவ்வொரு அங்கத்தினரும் தமது பணிகளைச் செய்ய வேண்டும். எனவே அங்கத்தினர்கள் கொடுக்கும் காணிக்கையினாலே மாத்திரமே சபை தனது ஊழியத்தைச் செய்ய இயலும்.

பிரசங்கித்தலும், தேவையுடையோருக்கு உதவுவதும் அதன் அங்கத்தினர்களை பக்திவிருத்தியடையச் செய்வதுமாகிய அனைத்தின் நோக்கம், மனிதர்களின் ஆத்துமாக்களை இரட்சிக்கவும், இறுதியில் தேவனுடைய நாமம் துதிக்கப்படவுமேயாகும். இவைகளைத் தவிர சபைக்கு வேறு எந்த வேலையும் இருக்கக்கூடாது! அரசியலமைப்பும், வியாபார அமைப்புகள் அனைத்தும், சமூக நல சேவைகளும், தேவனுடைய வசனத்திற்கு அப்பாற்பட்டது. கர்த்தருடைய சபை உலகில் இருந்தாலும் உலகத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரிய சரீரமாய், தேவனுக்குக் கீழ்ப்படியவும், மனிதருக்கு ஊழியம் செய்யவும், சுத்தமாயும் பரிசுத்தமாயும் நிலைத்திருக்கவும், அதன் அங்கத்தினர்கள் அனைவருக்கும் இரட்சிப்பு நிறைவேறவும், அதன் சிருஷ்டிகருக்கு மகிமையளிக்கவே விழைகிறது. இதுவே கர்த்தருடைய சபை, அதன் ஊழியம், அதன் பணியாகும்.

# சபையின் ஒற்றுமை (ஐக்கியம்)
## Unity of the Church

இன்றைய மத உலகம் எப்பொழுதுமில்லாத அளவுக்கு சபையின் ஐக்கியத்தில் அக்கறை காட்டுகிறது. 'எக்யுமெனிக்கல்' என்னும் 'சபை சாரா குழு' எங்குமுள்ள மனிதர்களுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்துவது போன்ற பிரம்மையை உண்டாக்கிக் கொண்டு உள்ளது. இதற்குக் காரணம், உலகில் இன்று ஏகப்பட்ட மார்க்கப் பிரிவினைகள் இருப்பதால், ஒவ்வொருவரும் மிகவும் விரக்தியடைந்துள்ளனர். இருப்பினும், ஒருவருக்கொருவர் ஒத்துக்கொள்ளாத கொள்கைகளை வைத்துக்கொண்டு, மனிதர்களின் மார்க்க சரீரங்களை ஒரு போதும் ஐக்கியத்திற்கு கொண்டுவர இயலாது. ஏதோ சில விஷயங்களில் ஒற்றுமையோ ஐக்கியமோ உண்டாவதைப் போல் இருந்தாலும், இன்னும் பிரிவினைகள் இருக்கவே செய்யும்.

எனவே இதற்கு பதில்தான் என்ன? இதற்குரிய பதில் வேதாகமத்திலேயே காணலாம். உண்மையான ஐக்கியம் நிலைபெற வேண்டுமானால், மனிதர்கள் தங்கள் உபதேசங்களையும், கொள்கைகளையும், (சபைப்) பெயர்களையும், (சபைப்) பிரிவுகளையும், உபதேசக் கோட்பாட்டுப் புத்தகங்களையும் விட்டு விலகி, வேதாகமத்தை எடுத்து, அதை வாசித்து, கற்று, விசுவாசித்து, அதற்குப் கீழ்ப்படிய வேண்டும்; அப்பொழுது மட்டுமே, **யோ.17ல்** கர்த்தர் ஜெபித்த ஜெபத்திற்கேற்ப உண்மையான ஒற்றுமையைக் காணக்கூடும். மனிதர் இதைச்செய்யும்போது, எல்லோரும் ஒரே காரியத்தை பேசவும், எல்லோரும் ஒரே உபதேசத்திற்குக்

கீழ்ப்படியவும், எல்லோரும் ஒன்றாக ஊழியம் செய்து, ஒரே உபதேசத்தைப் போதித்து, ஒன்றாக பரலோகம் செல்லக்கூடும். மனிதனை விடுத்து, கிறிஸ்துவைப் பின்பற்றும்போது ஐக்கியத்தை நிலை நாட்டுவது மிகவும் எளிது.

பிரிவினையை வசனங்கள் கண்டிக்கின்றது. பிரிவினைகளை விதைக்கிறவர்களையும், சகோதரர்களுக்குள் பிரிவினைகளை உண்டாக்குகிறவர்களையும் தேவன் வெறுப்பதாக வேதம் கூறுகிறது **(நீதி. 6:10). 1 கொரிந்தியர் 1ல்.** கொரிந்து சபை பிளவுபடுவதைக் குறித்துப் பேசுகிறது. இப்படிப்பட்டவைகளைக் குறித்து புகழாமல், அப்போஸ்தலனாகிய பவுல், அதன் அடிப்படை காரணியையே அழிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார். அவர் இப்படியாக ஆரம்பித்து பேசுகிறார், "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" **(1கொரி. 1:10).**

பிறகு மூன்று கேள்விகளைக் கேட்டு, அவைகளில் ஒவ்வொன்றிலும் அவர்களின் தவறான குணத்தை வெளிக்காட்ட முயலுகிறார். கேள்விகள் யாதெனில், "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயே திருமுழுக்கு பெற்றீர்கள்?" என்பதே! அவை மூன்றுக்குமே எதிர்பதமான பதிலையே அவர்கள் கொடுக்க வேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்களின் பிரிவினை நிலையின் அவலத்தை இப்படியாகச் சுட்டிக் காட்டினார்.

அதே அப்போஸ்தலனாகிய பவுல், ரோமாபுரியில் இருந்த சகோதரர்களுக்கு, "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டுவிலக வேண்டும் என்று உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (ரோ. 16:17,18) என்றார். மேலும், "நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து, தொடாதே, ருசி பாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறெதன்ன? அவையெல்லாம் அனுபவிக்கிறதினால் அழிந்து போகுமே" என்று கொலோ. 2:20–22ல் கேட்கிறார்.

இன்னும் சொல்லப் போனால், மனிதனின் உபதேசங்களும், மனிதக் கொள்கைகளும், வேதாகமத்திற்கப்பால் உள்ள புத்தகங்களைப் பின்பற்றுதலுமாகிய இவைகளனைத்தும் பிரிவினைகளுக்கு வழி வகுக்கின்றன. அதே வேளையில் கிறிஸ்துவை மாத்திரம் ஒருவர் பின்பற்றினால், ஐக்கியத்தை அனுபவிக்கக்கூடும். கிறிஸ்துவே. "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்கிறதல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன்." என்று ஜெபித்தார் (யோ. 17:20, 21). இயலாத ஒரு காரியத்துக்காகவா கிறிஸ்து ஜெபித்தார்? இல்லை! நிச்சயமாகவே ஐக்கியத்திற்கு

வழி உண்டு. எப்பொழுது? கிறிஸ்துவை நாம் பின்பற்றும் போது! மனித உபதேசங்கள் நம்மை பிரிக்கும்; ஆனால் வேத உபதேசமோ நம்மை இணைக்கும்.

எபே. 4:1–6ல், ஐக்கியத்திற்கான விதிமுறை கூறப்பட்டுள்ளன. அவைகளைக் கவனியுங்கள்: "ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லோரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்". இது ஐக்கியத்திற்கான அறைகூவல் என்பதைக் கவனியுங்கள்; அவைகள் 'ஒன்று' என்று வருவதையும் கவனியுங்கள். இந்த 'ஒன்று' என்பதற்கு வேறு கருத்துடையவர்கள் யார்?

சபையின் ஐக்கியம் என்பது, கிறிஸ்து தமது சபையைக் கட்டுவதாக சொன்னதிலே காணப்படுகிறது (மத். 16:18), ஒன்று என்று பொருள்பட கூறப்பட்ட அவருடைய ஆவிக்குரிய சரீரத்திற்கு (1 கொரி. 12:27), அவரே தலையாகவும் இருக்கிறார் (கொ. 1:18). நிச்சயமாக கிறிஸ்துவுக்கு இரண்டு சரீரங்களோ, இரண்டு தலைகளோ இருப்பதாக யாரும் குற்றஞ்சாட்ட இயலாது. சபை தேவனுடைய வீடு என்றும், தேவனுடைய குடும்பம் என்றும், காட்டப்படுகிறது (1

**தீமோ. 3:15).** ஆனால் எத்தனை வீடுகள் அல்லது குடும்பங்கள் ? ஒன்று மட்டுமே.

கிறிஸ்துவை இராஜாவாகக் கொண்ட, கிறிஸ்துவின் இராஜ்யம் என்றும் தேவனுடைய இராஜ்யம் என்றும் சபையைக் குறித்து வாசிக்கிறோம் **(யோ. 3:3–5, கொலோ. 4:11: 1 தீமோ. 6:15).** கர்த்தருக்கு எத்தனை இராஜ்ஜியங்களும், இராஜாக்களும் உள்ளனர் ? இரண்டுமே ஒவ்வொன்றுதான்.

நிச்சயமாகவே, வேதாகமம் பிரிவினை கூட்டமாகிய பிரிவினையை எதிர்க்கிறது. மறுபுறத்தில், ஐக்கியத்தையும், ஒற்றுமையையும், நிறைவையும் முழுமையையும் காட்டுகிறது.

வேதாகமம், சபை என்பதை பல்வேறு மார்க்கத்தார் தங்களது நம்பிக்கைகள், சடங்குகளை புறந்தள்ளிவிட்டு மறைவான ஒரே கூட்டமாக இருப்பதில்லை என்று கூறுகிறது, மாறாக அது அழைக்கப்பட்டவர்களாய், கிறிஸ்துவைப் பின்பற்றினவர்களாய், அவருடைய உபதேசங்களுக்கு கீழ்ப்படிந்தவர்களாய், இரட்சிக்கப்பட்டவர்களாய் காணும் கூட்டத்தைக் கொண்டு அமைவு பெற்றது. கிறிஸ்துவோ, அவருடைய சபையோ பிரிந்திருப்பதில்லை. பிரிந்திருப்பதும், பிரிவினையைப் பற்றிக் கொண்டிருப்பதும், கிறிஸ்து ஜெபித்த (ஒற்றுமைக்கான) ஜெபத்திற்கு எதிர்த்து நிற்பதாகும்.

# சபையின் கோட்பாடு (கொள்கை)
## Creed of the Church

கோட்பாடு எனும் பதம், 'கிரிடோ' (Credo) என்னும் லத்தீன் வார்த்தையிலிருந்து வருகிறது. அதன் விளக்கம், "ஒரு விசுவாசம்" அல்லது "மார்க்கரீதியான விசுவாச விதிமுறை" அல்லது "மார்க்க விசுவாச விதிமுறை" அல்லது அறிக்கை, "கொள்கைகளின் கூட்டுச்சுருக்கம்" அல்லது "தங்களின் கருத்தை வெளியிடுதல்" அல்லது பின்பற்றுதல். ஒருவர் கோட்பாட்டை நினைக்கும் பொழுதெல்லாம், அவர் வழக்கமாக, "அப்போஸ்தலர்களின் கோட்பாடுகளையும்" "நீசிய கோட்பாடுகளையும்" நினைத்துப் பார்க்கிறார். மேலும் மனிதனால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில், சுய மனிதக் கோட்பாடுகள் எல்லாம் கொள்கைப் புத்தகங்களாகவும், விதிமுறைகளாகவும், விசுவாச அறிக்கைகளாகவும் உள்ளன. இவை அனைத்தும், தேவனுடைய வசனத்துடன் கூட்டப்பட்டவை.

வேதாகமத்திற்கு மேலாக சபையானது, ஒரு கொள்கைப் புத்தகத்தை தனது உபதேசமாக தன்னகத்தேக் கொண்டிருக்குமானால், அது மிக அதிகம் என்று கூறலாமல்லவா? வேதாகமத்தைக் காட்டிலும், ஒரு கொள்கைப் புத்தகம் குறைவானதாகக் கொண்டிருக்குமானால், அது மிகக் குறைவு என்று சொல்லலாமல்லவா? எந்த ஒரு கொள்கைப் புத்தகமாவது வேதாகமத்தைப் போலவே தன்னகத்தேக் கொண்டிருக்குமானால், ஏற்கனவே வேதாகமம் நமக்கு இருப்பதால் அது பிரயோஜனமற்றது. **வெளி 22:18, 19, கலா. 1:6–9** ஆகிய வசனங்கள் வசனத்தோடு ஒன்றைக் கூட்டவோ, குறைக்கவோ அத்துடன் ஏதாவது ஒரு இணைப்பையோ கொடுக்கக்கூடாது. இன்னொரு வார்த்தையில்

சொல்லப்போனால், வசனங்கள் முழுமை பெற்றவைகள் (2 தீமோ. 3:16, 17) அவைகள் பூரணமானவை (யாக். 1:25), மேலும் தேவனுடைய வார்த்தையின்படியே நாம் பேசவேண்டியவர்கள் (1 பேது.4:11). எனவே வேறே கொள்கைப் புத்தகமோ, சட்டப் புத்தகங்களோ (பைபிளுக்கு அப்பால்) நமக்குத் தேவையற்றது.

தேவனுடைய வசனத்தையல்ல, மனிதனுடைய உபதேசங்களை பின்பற்றினதாலேயும், மனிதனுடைய கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டதினாலேயுமே இன்றைய கிறிஸ்தவ மார்க்க உலகம் பிளவுபட்டுக் காணப்படுகிறது. ஒவ்வொரு சபையும் தனக்கென கொள்கை ரீதியான சட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும் என வாதிடுகின்றனர். வேதாகமம் புறக்கணிக்கப்படுவதற்கு இதுவே அடையாளமாகும். இது எவ்வளவு வேதனைக்குரியது. ஒவ்வொருவரும் மனிதனால் உண்டுபண்ணப்பட்ட புத்தகங்களை விட்டு, தேவனுடைய வசனமாகிய வேதாகமத்திற்கே திரும்பவேண்டும் என்பதே நமது வேண்டுகோள். அது நம்மை பிரித்து வைக்காமல், கிறிஸ்து இயேசுவுக்குள் இணைக்கும்.

கர்த்தருடைய சபையின் கொள்கை என்ன ? கிறிஸ்துவையல்லாது வேறே இரட்சகர் இல்லை. வேதாகமமேயன்றி வேறே கொள்கையுமில்லை. மார்க்க விஷயத்தில் நமது எண்ணங்களும், யோசனைகளும் பிரயோஜனமற்றவை. வேதாகமத்தில், நமது "சொந்த" வியாக்கியானத்திற்கு இடமில்லை. நமக்கு உள்ளதெல்லாம் வேதாகமம் மட்டுமே. அதற்கு நாம் கீழ்ப்படிந்திருக்கிறோம், பிறரையும் கீழ்ப்படியச் சுட்டிக்காட்டுகிறோம். எனவே அதைப் படிக்கவும், கற்கவும்

ஒவ்வொருவரையும் வேண்டுகிறோம் (யோ.5:39: 2 தீமோ. 2:15), எங்குமுள்ள அனைத்து மக்களும் அதன் போதனைகளின்படிச் செய்ய கேட்டுக்கொள்கிறோம்.

நாம் பின்பற்ற ஏதுவான துணைப் புத்தகமோ, புத்தகங்களோ நமக்கில்லை. வேதாகமத்திற்குச் சமமான சட்டங்களையோ, ஒழுங்குகளையோ எழுதக்கூடிய அளவுக்கு உலகில யாரும் இருப்பதாக நாம் நம்புவதில்லை. அப்படிப்பட்ட புத்தகத்தை எழுதும்படி கர்த்தர் யாருக்கும் உரிமை கொடுத்திருப்பதாகவும் நாம் நம்புவதில்லை. வேதாகமம் எழுதப்பட்டபின் பரிசுத்த ஆவியானவரும் அப்படிப்பட்ட புத்தகத்தை எழுதும்படி யாரையும் ஏவியிருக்கக்கூடும் எனவும் நாம் நம்புவதில்லை.

தேவனுடைய வசனம் மட்டுமே, தேவனிடத்திலிருந்து வந்தது; தேவனால் ஏவப்பட்டது; அதுவே நம்மை இரட்சிக்கவும் முடியும். மேலும், கடைசி நாளிலே நம்மை நியாயம் தீர்ப்பதும் தேவனுடைய வசனமே (யோ. 12:48). சத்தியத்தின் ஊற்றுக்கண்ணுக்குச் செல்லாமல் சத்தியத்தைக் காண இயலாது. எனவே சத்தியத்தை விசுவாசிக்க வேண்டுமானால், நீங்கள் சத்தியத்தைக் கேட்க வேண்டும். (ரோ.10:17). கிறிஸ்தவ மார்க்க விஷயங்களில் பெரும்பான்மையோர் வஞ்சிக்கப்பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை; மார்க்க உலகில், ஏராளமான பிரிவினைகளும் குழப்பங்களும் ஏற்பட்டிருப்பதிலும் ஆச்சரியமில்லை; மனிதன் கர்த்தரிடத்திலே செல்லுவதற்குப் பதில், மனிதனிடத்திலே (ஆலோசனை) உதவி கேட்டுச்செல்கிறான். மனிதனோ வேத எழுத்துக்களுக்கு பதிலாக மனிதனுடைய உபதேசங்களுக்குத் திரும்பிப் போகின்றான். நிச்சயமாக, மனிதன் இரட்சிக்கப்பட வேண்டுமாயின், வேதாகமத்திற்கேத் திரும்ப வேண்டும்.

சபைக்கடுத்த சத்தியங்களை அறிய, மனிதன் வேதாகமத்திற்கு செல்லும்படி உற்சாகப்படுத்துகிறோம். உலகிலே இன்று எத்தனையோ போலி சபைகள் உள்ளன. எது சரியானது? ஒருவர் ஒவ்வொரு சபையைக் குறித்தும் தனித்தனியாக ஆய்வு செய்யக்கூடுமோ? இல்லை, சபையைக் குறித்து பேசுகிற சத்தியம் அடங்கிய புத்தகத்திற்கே செல்லவேண்டும். ஒருமுறை அவர் கர்த்தருடைய சபையைக் குறித்த சத்தியத்தைக் கற்றால், தொடர்ந்து வேதாகமப் போதனையை அடையாளப்படுத்துவதில் சிரமம் இராது.

ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்? என்பதை அறிய, வேதாகமத்திற்குச் செல்லும்படி உற்சாகப்படுத்துகிறோம். மனித உபதேசத்தின்படி இரட்சிக்கப்பட அநேக வழிகள் உள்ளன; ஆனால் தேவனுடைய புத்தகத்தை, ஒருவர் பின்பற்றும்போது, சத்தியத்தை கேட்க வேண்டும், அதை விசுவாசிக்க வேண்டும், பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும், பாவ மன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெற வேண்டும் என்கிற எளிதான போதனையைக் காண இயலும் **(மாற்கு. 16:15, 16; அப். 2:38).** மனிதன் சொல்லுவது எந்த வகையில் வித்தியாசமானது? கர்த்தரே இரட்சிக்கிறவர், எனவே ஒருவர் இரட்சிக்கப்பட சத்திய வசனத்தைக் கேட்டு கீழ்ப்படிய வேண்டும்.

மனிதன் தேவனை எப்படித் தொழுது கொள்ள வேண்டும்? என்பதை அறியவும், வேதாகமத்திற்கே செல்லும்படி உற்சாகப்படுத்துகிறோம். மனிதன் கூறுவதற்கு முரணாக, வேதாகமத்தில் அநேக தொழுகை முறைகள் (வழிகள்) இல்லை? வேதாகமம், கர்த்தர் சுட்டிக்காட்டிய ஒரே வழியாகிய அவரது வார்த்தையையே போதிக்கிறது **(யோ. 4:24).**

இவைகள் மாத்திரமல்ல இரட்சிப்பு, ஜீவன், தேவபக்தியுமாகிய அனைத்து காரியங்களையும் குறித்து அறிய, ஒவ்வொருவரும் வேதாகமத்திற்குச் சென்று அவைகளுக்குரிய சத்தியத்தை அறிய ஆலோசனை கூறுகிறோம். 'வேதாகமத்தைப் புரிந்து கொள்ள இயலாது; நிச்சயமாக உள்ளபடியே புரிந்துகொள்ள இயலாது' என்ற கருத்தை மனிதன் கொண்டுள்ளான், இது உண்மையல்ல. மனிதன் தன்னைத்தான் இழந்து போக ஏதுவாக, வேதத்திற்கு புறம்பே நிற்க வேண்டும் என்பதையே பிசாசு விரும்புகிறான். மனிதன் இரட்சிக்கப்படும்படி வேதத்தினிடத்தில் வரவேண்டும். அதை நம்ப வேண்டும்; மேலும் மத விஷயங்களில் வேதம் மட்டுமே வழி நடத்த அனுமதிக்க வேண்டும். அப்பொழுது தான் அவன் சரியாக இருக்க முடியும்; அதினால் இரட்சிக்கப்படவும் முடியும்.

நமது கொள்கை என்ன? இயேசு கிறிஸ்துவும், அவரது வார்த்தையுமே. அவரேயன்றி வேறொருவருமில்லை, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும், அவரது வார்த்தையே இறுதியானவை என்றும் நாம் விசுவாசிக்கிறோம். அதை நாம் ஏற்றுக்கொண்டு, அதை மட்டும் பின்பற்றுகிறோம். மற்ற எல்லாரும் இதையே செய்யும்படி ஊக்கப்படுத்துகிறோம். மனிதனின் கொள்கைகள் ஒரே இடத்திற்கு கொண்டுசெல்லும் அதுதான் நரகம். இயேசு சொன்னார், "நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்". **(யோவான். 14:6).**

# சபையின் வரலாறு
## History of the Church

**அப்போஸ்தலர் 2–ம்** அதிகாரத்தில், கர்த்தருடைய சபை அல்லது இராஜ்யம் தோற்றுவிக்கப்படுகிற அல்லது ஆரம்பிக்கப்படுகிற காட்சியைக் காண்கிறோம். அப்போஸ்தலர்கள் எருசலேமில் இருந்தனர்; மேலும் அவர்கள் மீது ஆவியானவர் ஊற்றப்படுகிறார். பெந்தெகோஸ்தே தினத்தை முன்னிட்டு அநேக நாட்டு மக்களும் அங்கே கூடி வருகின்றனர். பேதுருவும், அப்போஸ்தலர்களும் யோவேல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக அதை அறிவித்தனர். கிறிஸ்து மரித்தார் என்பதைக் காட்டி, இப்படியாக கடைசி நாட்கள் ஆரம்பமாயிற்று எனவும், மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் பிரசங்கிக்கப்படுகிறது எனவும், அறிவிக்கப்பட்டது; ஏறத்தாழ 3000 ஆத்துமாக்கள் நற்செய்தியைக் கேட்டு திருமுழுக்குப் பெற்றனர்; கர்த்தர் அவர்களை தமது சபையில் சேர்க்கிறார். பிறகு எருசலேம் தொடங்கி யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிப் பரியந்தமும் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளும் கேட்கத்தக்க வகையில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது(**அப். 1:8; மத். 28:19, 20; மாற். 16:15,16; கொலோ. 1:23**).

சபை, அப்போஸ்தலர்கள் காலத்தில் செழிப்படைந்தது. துரிதமாக பரவியது. பவுல் மனமாற்றப்பட்ட பிறகு, மூன்று நற்செய்தி பயணங்களை மேற்கொண்டு யூதர்களுக்கு மாத்திரமல்ல, புறஜாதிகளுக்கும் நற்செய்தியைப் பிரசங்கித்தார். இதின் பலனாக அநேகர் மனமாற்றப்பட்டு ஐரோப்பியாவிலும், ஆசியாவிலும் கர்த்தருடைய அநேக (உள்ளூர்) சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. அது அவ்வளவு எளிதாக இருந்திருக்கவில்லை. மாறாக, ஏராளமான

உபத்திரவங்களிருந்தன. முதலாவதாக, எருசலேமிலே தோற்றுவிக்கப்பட்ட சபை உபத்திரவத்தைக் கண்டது. ஆகையால், சிதறிப்போன சீடர்கள் எங்கும் திரிந்து வசனத்தைப் பிரசங்கித்தனர் (அப். 8:1–4). காலஞ்சென்றபோது, ரோமர்கள் அநேக பிரச்சனைகளுக்காக கிறிஸ்தவர்களை குற்றப்படுத்திக் கொண்டிருந்தனர்; ரோம அரசாங்கம் ஆளுகை செய்த எவ்விடங்களிலும், உபத்திரவப்படுத்துவதையே விளையாட்டாகக் கொண்டிருந்தனர். இறுதியாக, பவுலை சிறைபிடித்து விசாரணைக்காக ரோமாபுரி கொண்டு சென்றனர். யோவானைத் தவிர மற்ற அனைத்து அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவினிமித்தம் கொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, ஏன் லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் கூட தங்களின் உயிரை இழந்தனர்.

உபத்திரவங்களுக்கும் அப்பால் சபை வளர்ந்து பெருகியது. சபையை, உபத்திரவங்கள் பெரிதாகக் கீழேத் தள்ளமுடியவில்லை; ஆனால் சபைக்குள் நடந்தவையே வீழச்சியைக் கொண்டு வர ஆரம்பித்தது. விசுவாசத்தை விட்டு விலகிப் போவது எப்பொழுது, என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் முன்னுரைத்தார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், கர்த்தருடைய சபையின் அநேக அங்கத்தினர்கள் தவறான வழிகளில் விழுந்து போகும் காலம் வரும் என்று அவர் சொன்னார்: "அன்றியும் சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவதையும் குறித்து நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்.

எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு

எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் விசுவாசத் துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும் தேவனெனப்படுவது எதுவோ, ஆராதிக்கப்படுவது எதுவோ அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும் தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தானே தேவனென்று காண்பிக்கிறவனாயுமிருப்பான். நான் உங்களிடத்திலிருந்த போது இவைகளைச் சொன்னது ஞாபகமில்லையா?

அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆகிலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தமது வாயின் சுவாசத்தினாலே அழித்து தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்.

அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்குள் அனுப்புவார்" **(2 தெச. 2:1–12).**

பவுல் கூறிய அந்த நேரத்திலேயே, அக்கிரம் கிரியை செய்ய ஆரம்பித்திருப்பதாக சொல்லியிருப்பதைக் கவனியுங்கள். அவர் தொடர்ந்து

கூறும்போது, "ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனசாட்சியிலே சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டுவிலகிப் போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும், ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாயின் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல" **(1 தீமோ. 4:1–3).**

எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் பவுல் பேசும்போது, "ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தமது சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய் உங்களுக்குள்ளே வரும். உங்களில் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி, மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று, அறிந்திருக்கின்றேன். ஆனபடியால், நான் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்கு புத்திசொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்" **(அப். 20:28–31).**

பவுல் எச்சரித்தபடியே, சபைக்குள்ளிருந்து எழும்பியவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள் அநேகரை தங்களிடத்தில் இழுத்துக்கொண்டார்கள். சபையின் ஆளுகை அமைப்பிலே விசுவாசத்தைவிட்டு வழுவிப்போன காரியம் ஆரம்பித்ததாக உலக வரலாறு கூறுகிறது. ஒவ்வொரு உள்ளூர் சபையும் தன் மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் கொண்டு சுய ஆளுகை அமைப்பைப் பெற வேண்டுமென்பது கர்த்தருடைய திட்டம். இருப்பினும், ஒரு காலகட்டத்தில்

அவைகளில் ஒரு மூப்பரை அல்லது கண்காணியை அநேக பிராந்திய சபைகளில் ஆளுகை செய்யும்படி உயர்த்தினர்.

அதன் விளைவாக அகில உலகத்திலுமுள்ள அநேக பிராந்திய சபைகளுக்கும், ஒரு பொதுவான கண்காணி நியமிக்கப்பட்டார். ஆகிலும் இது ஒரு இரவுக்குள் நடந்துவிட்ட சம்பவமல்ல. அநேக வருடங்களினூடே (கி.பி.606ல்) முதலாவது உலகப் பொது கண்காணி விழுந்து போன சபையார்களின் அமைப்புக்கு போப்பாக மாறி, இன்று கத்தோலிக்கர் என்று தங்களை அழைத்துக்கொள்கிறார்களே அவர்களின் பிரிவினை சபை உருவாயிற்று. கர்த்தருடைய சபைக்கு என்ன நேர்ந்தது? விசுவாசமுள்ள சிலர் தொடர்ந்து நிலைத்திருந்தனர். அவர்கள் முழுமையாகக் கூட கவனம் செலுத்தப்படவில்லை. ஆகிலும் கர்த்தர் தமது சபை அல்லது இராஜ்யம் நிலைத்திருக்கும் என்பதையும் அது செய்ய வேண்டியவைகளையும் உறுதியளித்தார்.

மார்க்க உலகை பொறுத்தவரையில், கத்தோலிக்க சபை ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்திருந்தது. உண்மையென்னவெனில், இருண்டயுகம் என்றழைக்கப்படுகிற அநேக நூற்றாண்டு காலமாக, உலகை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது இது. ஏனெனில், பொது ஜனங்கள் யாரும் வேதத்தைப் படிக்க அனுமதிக்காமலும், பாதிரியார்களே வேதத்தைப் படித்து புரிந்துகொள்ள தகுதி பெற்றவர்கள், அவர்களே வேதத்தை மக்களுக்கு போதிக்க வேண்டியவர்கள் என்ற கோட்பாட்டினாலும் இப்படி நடந்தது. மக்களுக்கு தாங்கள் எவைகளைச் சொல்ல எண்ணினார்களோ, அதை மாத்திரம் சொன்னார்கள் என்பதுதான் இதன் இயல்பான பொருள்.

இக்காலக் கட்டத்தில்தான் தெளிப்பு ஞானஸ்நானம் மற்றும்

இசைக்கருவிகளைக் குறித்த உபதேசத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால், கத்தோலிக்க சபையும் ரோம மற்றும் கிரேக்க கிளைகளாக பிளவுபட்டுப் போயின. காலஞ்செல்லச் செல்ல, ரோமன் கத்தோலிக்க சபை தமது ஆலோசகர்களைக் கொண்டு தனது முறையில் மேலும் பல நூதன உபதேசங்களை மேற்கொண்டன. இறுதியாக, கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டில், கத்தோலிக்க சபை உபதேசத்திலும், ஒழுக்க ரீதியிலும் மிகவும் சீர்கெட்டுப் போயிருந்தபோது மார்ட்டின் லூத்தர் என்பவர் தாம் ஒரு பாதிரியாராக இருந்தும், சபையை மறுமலர்ச்சியடையச் செய்ய முயற்சித்தார். எப்படியிருப்பினும், அவர் அச்சபையின் ஐக்கியத்திலிருந்து விலக்கப்பட்டபொழுது, தான் சரி என நினைத்த காரியங்களை போதிக்கவும், கைக்கொள்ளவுமாக சபையை விட்டு விலகிப்போனார். இதிலிருந்து மறுமலர்ச்சி இயக்கம் அல்லது புராட்டஸ்டண்ட், பிரிவு உண்டாயிற்று; அதிலிருந்தே இன்றுள்ள அநேக பிரிவினை (பெயர்) கூட்டங்கள் உருவாயின. லூத்தரின் 'வேதாகமத்திற்குத் திரும்புங்கள்' என்ற முயற்சியுடன் கூடிய போதனை, உலகின் பல பாகங்களிலும் பிரதிபலித்தன. ஆனால் அப்படிச் செய்யாமையால் முழு வெற்றியைக் காண அவர்களால் கூடாமற்போயிற்று.

பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருந்த நாமகரண கூட்டத்தார், பிரிவினைகளிலும், குழப்பங்களிலும் வளர்ந்தமையால் அதிலே சலிப்படைந்தனர். கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் தாங்கள் இருந்த தவறுகளை விட்டு, வேதாகமத்திற்கே முற்றிலும் திரும்பினார்கள். அவர்களின் ஆவல் ஒரு புதிய சபையைத் தோற்றுவிப்பதாக இராமல், வசனங்களில் கூறப்பட்ட ஒரே சபைக்குத் திரும்புவதாக இருந்தது. அவர்கள் அப்படிச் செய்தார்கள்.

அதிலிருந்து புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்திற்குத் திரும்பும்படியான வேண்டுகோள்கள் விடப்பட்டன. இலட்சக்கணக்கானோர் இதைக்கேட்டு, மனித உபதேசங்களை விட்டு கர்த்தருடைய சபையில் அங்கமாகி, சாதாரணமாகத் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று மாத்திரம் அழைத்துக் கொண்டனர்; வேதாகமத்தையே தங்களின் ஒரே வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டனர். சத்தியத்தைப் போதிக்கும்படி உலகமெங்கிலும் சென்ற கிறிஸ்தவர்கள், ஏற்கனவே ஆப்பிரிக்கா, இந்தியா, ரஷ்யா, போன்ற பகுதிகளில் பிராந்திய சபைகள் தனது வேதாகமத்து பரிசுத்தத்தோடு இருந்ததைக் கண்டுபிடித்தனர். அந்த சபை அன்று போலவே இன்றும் என்றும் நிலைத்திருக்கிறது. இது ஒன்றே வேதாகமத்தில் சொல்லப்பட்ட உண்மை சபை என அடையாளம் காட்ட ஆரம்ப காலத்திற்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள அதே முன் மாதிரியைப் பின்பற்றும்போது, நாம் கர்த்தருடைய (உண்மை) சபையாகிறோம். விதை தேவனுடைய வசனம் (லூக். 8:11): அப்போஸ்தலர்கள் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவைகளையே இன்றைக்கும் அது தோற்றுவிக்கிறது; அதாவது கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக, கர்த்தருடைய இராஜ்யம் என்றென்றும் நிலைக்கக்கூடியது என்பது நமக்குத் தெரியும். ஆதலால் அது எங்காவது நிலைத்திருக்க வேண்டும். அது உருவாக்கப்பெற்ற நாள்துவங்கி, தொடர்ந்து நிலைத்திருக்கவே செய்கிறது. எந்த மனிதனாலும், பிசாசினாலும் அதை அழிக்க இயலாது. இதுதான் கர்த்தருடைய இராஜ்யம். அவருடைய சபை ஆரம்பம் முதல் முடிவுவரை வெற்றி சிறக்கக்கூடியது. இறுதியில் என்றென்றும் கர்த்தரோடே கூட வாசம் பண்ணும்.

# இன்றுள்ள சபை
# The Church Today

கர்த்தருடைய சபை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக தோற்றுவிக்கப்பட்டது (அப்.2): ஆனால் அன்று இருந்த நிலையிலே அது இன்றும் இருக்கிறது. 'ஆனால் இது எப்படி சாத்தியமாகும்?' என்று நீங்கள் கேட்கலாம். இதற்கு புதிய ஏற்பாட்டு மாதிரியை எளிமையாய் பின்பற்றுவதன்மூலமே, சாத்தியமாகும்.

இன்றுள்ள சபை அன்று கர்த்தரால் தோற்றுவிக்கப்பட்ட மூல சபைதான் என்பதை நிரூபிக்க ஒவ்வொரு வருடமாக துவங்கி, பெந்த கொஸ்தே நாள் சம்பவத்திற்குச் சென்று, ஆராய்ந்து அடையாளம் காண வேண்டும் என்பது சிலருடைய எண்ணம். எப்படியிருப்பினும் இது உண்மையன்று; முதலாவதாக கர்த்தர் நமக்குச் சொல்லியிருக்கிற, இராஜ்யம் அல்லது சபை அழிவைக் காணாது, என்றென்றும் நிலைத்திருக்கும் என்று நமக்குக் கூறியிருக்கிறார் **(தானி. 2:44: லூக். 1:33: எபி. 12:28).**

அதன் பொருள் ஆரம்ப முதல் இன்றுவரை சபையானது உலகின் ஏதோ ஒரு பகுதியில் நிலைத்திருந்துள்ளது. இது உண்மையாக்கப்பட எல்லா இடங்களிலும் எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டுவதில்லை. அடுத்ததாக, புதிய ஏற்பாட்டிலே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள வசனங்களாகிய விதை நமக்கு உள்ளது. **(லூக். 8:11).** அப்போஸ்தலர்கள் காலத்தில் இந்த வித்துக்கள்

கிறிஸ்தவர்களை மாத்திரம் பிறப்பித்திருக்குமேயாகில், இன்றும் "கிறிஸ்தவர்களை" மாத்திரமே அது பிறப்பிக்கும். அப்போஸ்தலர் காலத்தில் கிறிஸ்தவர்களடங்கிய கூட்டமே சபையாக உருப்பெற்றிருந்ததனால், இன்றும் அது உண்மையானது. ஆகையால் புதிய ஏற்பாடு எங்கெல்லாம் நிலைத்திருக்கிறதோ அங்கெல்லாம் கர்த்தருடைய சபை நிலைத்திருப்பது சாத்தியமே. விருப்பமுள்ளோர் அது சொல்வதை செய்வார்கள்.

தேவன் எப்பொழுதுமே தமது மக்கள் பின்பற்ற ஒரு மாதிரியைக் கொடுத்திருக்கிறார். நோவா பேழையைக் கட்ட அவர் ஒரு மாதிரியைக் கொடுத்தார். **(ஆதி.6).** ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்ட மோசேக்கு அவர் ஒரு மாதிரியைக் கொடுத்து, "...மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு, என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்." **(எபி. 8:5).** எனவே புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய சபையின் பூரணப்பட்ட மாதிரிகள் நமக்கு உள்ளன. நோவாவும், மோசேயும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட மாதிரியை பின்பற்றும்படி எதிர் பார்க்கப்பட்டது போல, நாமும் சபைக்கான மாதிரியை அப்படியே பின்பற்ற வேண்டும். நோவாவும், மோசேயும் தங்களுக்கு சொன்னபடியே பேழையையும், ஆசாரிப்புக் கூடாரத்தையும் அமைப்பதில் மாதிரியைப் பின்பற்றியபோது, தேவன் அதன் பலனைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். எனவே நாமும் ஒன்றையும் கூட்டாமலும், குறைக்காமலும் சபையின் மாதிரியைப் பின்பற்றினால், தேவன் அதன் பலனைக் கண்டு மகிழுவார் **(வெளி. 2:18, 19).**

சபையைக் குறித்த அனைத்து அச்சடையாளங்களும், புதிய ஏற்பாட்டில்

தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது; சபை என்றால் என்ன ? எங்கு தோற்றுவிக்கப்பட்டது? அதை அறிமுகப்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்கள், அதன் அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள், அதில் அங்கம் வகிப்பது எப்படி? அதன் தொழுகை முறை, அதன் வேலைகள் ஆகிய அனைத்தையும் கர்த்தர் கூறியிருக்கிறார். யார் அதன் தலைவர்? என்பதையும், அவர் அதற்கு செலுத்திய விலை, அதன் இரட்சகர் யார்? போன்றவைகளையும் அது சொல்லுகிறது. அது என்ன என்பதைக் குறித்தோ? அதன் பணிகள் என்ன என்பதைக் குறித்தோ? எவ்வித சந்தேகத்தையும் அது நமக்கு விட்டுவைப்பதில்லை. தேவனுடைய வசனத்தில் எவ்வளவு தெளிவாய்ச் சொல்லப்பட்டுள்ளதோ, அவ்வளவு தெளிவாய் அதன் மாதிரியும் காணப்படுகிறது.

எனவே, வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள உண்மை சபையை அறிய வேதத்தை நாம் கற்பது அவசியமாகும். நாம் இதைக்குறித்து சத்தியத்தை அறிந்து; அதைப்பின்பற்றும் போது, நாம் அதன் அங்கங்களாகிறோம்; இப்படியாக கிறிஸ்து ஆரம்பத்தில் தோற்றுவித்த அதே சபையில் அங்கமாகிறோம், விதை தன்னுடையதை பிறப்பிப்பது போல, தேவனுடைய வசனம் எப்பொழுதும் உள்ளதுபோல் கிறிஸ்தவர்களாகிய அங்கத்தினர்களையே உருவாக்கும்.

கிறிஸ்துவின் சபை உலகெங்கிலும் காணப்படுகிறது; அது இங்கேயும் இருக்கிறது, எங்கும் உள்ளது. வேதம் போதிப்பதை மனிதன் பின்பற்றும்போது, அது எங்கும், எப்பொழுதும் நிலைபெறும். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற மனதில்லாத உலகின் எப்பகுதியிலும் அது அழிந்துவிடும்.

கிறிஸ்துவின் சபை வேதாகமத்தை மாத்திரம் பின்பற்றுகிறபடியால், இன்று அது வளர்ந்து பெருகிக்கொண்டே இருக்கிறது. அது பிரிவினைகளைக் கண்டித்து, கிறிஸ்துவை உயர்த்துகிறது. இந்த ஒரே சபையைக் குறித்துதான் வேதத்தில் வாசிக்கிறோம். இது பிரிவினை கூட்டமுமல்ல, நாமகரணங்களின் கூட்டமைப்பும் அல்ல. இது புராட்டஸ்டண்ட்டும் அல்ல, கத்தோலிக்கமுமல்ல, பெந்தெகோஸ்தே என்ற ஏதோ ஒரு பிரிவினையைச் சார்ந்தது மல்ல. அப்படியானால் இது என்ன? இது கர்த்தருடைய சபை அவ்வளவுதான்.

கர்த்தருடைய சபைக்கு பூமிக்குரிய தலைவரோ, தலைமையகமோ இல்லை. எந்த மனிதனையும் நாம் உயர்த்துவதில்லை. உடல் சிந்தையிலான உயர்ந்த அமைப்புகளை கொண்டிருப்பதில்லை. ஒவ்வொரு உள்ளூர் சபையும் தன்தன் மூப்பர்கள், உதவிக்காரர்கள், பிரசங்கியார்கள், போதகர்கள் மற்றும் அங்கத்தினர்களைக் கொண்டு அமைவு பெற்று, தன்னாட்சி செய்கிறது. ஒரு அங்கத்தினர் மற்ற அங்கத்தினரைவிட உயர்த்தப்படுவதில்லை, ஏனெனில் தலைவர்களோ, சாதாரண மக்களோ இதில் இல்லை.

கிறிஸ்துவின் சபைக்கு எப்போதுமே எதிரிகள் இருந்தனர். இப்பொழுதும் இருக்கின்றனர்; மனித மத அமைப்புகள் அவர்களது மாதிரியைப் பின்பற்றாமையால், எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். கிறிஸ்துவின் சபை வேதாகம உபதேசத்தைப் பின்பற்றுவதால், யாரோ சிலர் வேதாகமத்தை மாத்திரம் பின்பற்றுகின்றனர் என்பதை மிகவும் உன்னிப்பாக எதிரிகள் கவனிக்கின்றனர். அவர்கள் மனிதர்களைப் பின்பற்றி மனிதப் பெயர்களைத் தரித்துக்

கொண்டிருக்கையில், நாம் கிறிஸ்துவைப் பின்பற்றி, கிறிஸ்துவின் பெயரை தரித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் அறிவார்கள். நமக்கு எதிரான அவர்களுடைய ஆயுதங்களெல்லாம் சத்தியமல்ல. மாறாக, ஜனங்களின் இருதயங்களில் தவறான கருத்துக்களைப் புகுத்தி, நம்மைத் தவறாகக் காட்டுவதே ! ஆகிலும் அவர்களின் பிரயாசங்கள் விருதா.

காலங்களினூடே கர்த்தருடைய சபை வெற்றி நடைப்போடுகிறது. இவ்வுலகத்தில் அனைத்து எதிரிகளும், நரகத்தின் அனைத்துப் பிசாசுகளும், சபையைத் தடை செய்ய முடியாது. தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களைக் காட்டிலும் அவன் சிறிய எண்ணிக்கையுள்ளவனாக இருக்கலாம். ஆனால் அந்த சிறிய எண்ணிக்கைதான் இரட்சிக்கப்படுவர் (மத். 7:13, 14). கிறிஸ்துவுக்கு ஒரு சபை மட்டுமே உண்டு. அந்த சபைக்காக மட்டுமே கிறிஸ்து ஒரு நாளிலே திரும்ப வருவார் (எபே. 5:27: யோ. 14:1–6).

அவரே தமது அரசினுடைய அரசர். அவர் அதற்காக வந்து அதை தேவனிடத்தில் ஒப்புக் கொடுப்பார் (1 கொரி.15:24). அவருக்கு ஒரே ஒரு மணவாட்டி உண்டு. (வெளி.21:19), எனவே தனது பெயர் தரித்துக் கொண்ட அந்த மணவாட்டியைச் சேர்த்துக்கொள்ள அவர் வருகிறார். மற்றவர்களைக் குறித்து என்ன? அவர்களை தான் ஒருக்காலும் அறியவில்லை என்று மறுப்பதோடு, அவர்களை வேரோடே பிடுங்கிப் போடுவார் (மத்.15:13). அவர்கள் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கப்பட்டு, அக்கினியிலே தள்ளப்படுவார்கள்.

இன்று எமது வேண்டுகோள்களெல்லாம் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்திற்குத் திரும்புங்கள்; அதுவே உங்கள் வழிகாட்டியாகட்டும். உங்கள் வேதத்தை அறியுங்கள். அப்பொழுது நீங்கள் சத்தியத்தை அறிவீர்கள் (மத்.15:13), அது என்ன சொல்லுகிறதோ அதைச் செய்யுங்கள், அப்பொழுது வேதாகமத்தில் வாசிக்கிற சபையில், வேதம் கூறும் முறையில் இரட்சிக்கப்பட்டு, நீங்கள் கர்த்தரால் சேர்க்கப்படுவீர்கள்.

நீங்கள் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக இல்லாதிருப்பின், நீங்களும் ஒரு அங்கத்தினராகும்படி ஊக்கப்படுத்துகிறோம். தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, நீங்கள் இரட்சிக்கப்படும்படி திருமுழுக்கு பெறுங்கள் (மாற்.16:16: ரோ.10:10 அப். 2:38). பிறகு கர்த்தர் உங்களை சபையிலே சேர்த்துக் கொள்வார்; நீங்கள் கிறிஸ்தவராவீர்கள் (அப்.2:47: 11:26), நீங்கள் அதைச் செய்வீர்களா? அதைச் செய்யும்படி உங்களை யாரும் வற்புறுத்தப்போவதில்லை; ஆனால் நீங்கள் வேதத்தை வாசிப்பீர்களாகில், நீங்கள் கிறிஸ்தவனாக மட்டும் இருப்பதை விரும்புவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இப்படியாக உங்கள் வாழ்வின் பின் பகுதிகளை கர்த்தருக்காகவே வாழ்ந்து காட்ட முயற்சிப்பீர்களா ? இறை அரசின் எல்லைகளைப் பெரிதாக்குவீர்களாக.

# நீங்கள் அறியவேண்டிய சில உண்மைகள்

## வேதாகம சபையின் அங்கத்தினர்கள்...

| | | |
|---|---|---|
| அவயவங்கள் | : | 1 கொரி. 12:57 |
| சீஷர்கள் | : | அப். 6:1 |
| விசுவாசிகள் | : | அப். 5:14; 2 கொரி. 6:15 |
| பரிசுத்தவான்கள் | : | அப். 9:13; பிலி 1:1 |
| ஆசாரியர் | : | 1 பேதுரு 2:10; வெளி.1:5 |
| பிள்ளைகள் | : | 1 யோவான் 3:1-2. |
| கிறிஸ்தவர்கள் | : | அப். 11:26; 1 பேதுரு 4:16; அப். 26:28 |

என்று அழைக்கப்படுகிறார்கள்.

## சபைக்குள் பிரவேசிப்பதற்கு...

| | | |
|---|---|---|
| சுவிசேஷத்தை கேள்விப்பட வேண்டும் | : | ரோ. 10:17 |
| கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் | : | யோ. 8:24; அப். 10:31; எபி. 11:6 |
| பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் | : | லூக். 12:3; அப். 2:38; 17:30 |
| விசுவாசத்தை வாயினால் அறிக்கையிட வேண்டும் | : | மத். 10:32-23; ரோ. 10:10 |
| ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் | : | மத். 28:19; மாற். 16:16; அப். 2:38; 10:48; 22:16; 1 பேதுரு 3:21; கலா 3:27 |

## ஞானஸ்நானத்திற்குள்...

| | | |
|---|---|---|
| உங்கள் பாவங்கள் கழுவப்படுகின்றன | : | அப். 22:16. |
| நீங்கள் பாவத்திலிருந்து மீட்கப்படுகிறீர்கள் | : | 1பேதுரு 3:21; மாற்கு 16:16. |
| உங்களுக்கு பாவமன்னிப்பு கிடைக்கிறது | : | அப். 2:38 |
| நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளாகிறீர்கள் | : | கலா. 3:27 |
| நீங்கள் சபைக்குள்ளாகிறீர்கள் | : | அப். 2:37-47 |
| நீங்கள் கிறிஸ்துவை தரித்துக்கொள்கிறீர்கள் | : | கலா. 3:27 |
| நீங்கள் புதிதாகுகிறீர்கள் | : | ரோமர் 6:3-5 |
| நீங்கள் கீழ்ப்படிகிறீர்கள் | : | அப். 10:48; 2தெச. 1:7-9 |

## அந்த உண்மையான வேதாகமம் சபை இன்றும்...

* உங்கள் சமுதாயத்திலிருக்கிறது; தேவ வசனத்தால் வழிநடத்தப்படுகிறது; அது ஒரு பிரிவல்ல; அதுவே கிறிஸ்துவின் ஒரே சபை.
* அது இன்றும் புதிய ஏற்பாட்டு மாதிரியைப் பின்பற்றுகிறது.
* அது சத்தியத்திலும், போதனையிலும் ஒன்றாயிருக்கிறது.
* சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதால் அங்கத்தினர்கள் அதில் கர்த்தரால் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.
* மனிதரின் ஆதிக்கமற்றது.
* அதின் அங்கத்தினர்கள் அதே பெயரைக் கொண்டவர்கள் - 'கிறிஸ்தவர்கள்'.

## நீங்களும் அதன் அங்கத்தினராக முடியும்...

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்திலுள்ள உதாரணங்களைப் பின்பற்றி, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதனால்...

# கேள்வி - பதில் பகுதி
## Question & Answer Section

இப்பகுதியிலுள்ள கேள்விகளுக்கு, பாடங்களை படித்து முடித்தபின் பதில்களை நிரப்பி, தனியே கத்தரித்து அனுப்பி வைக்கவும்.

**தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக !**

## பாடம் 1 – கேள்விகள்

**தயவுசெய்து ஆம்/இல்லை என்று குறிப்பிடுக:**

1. வேதாகமம் சபையைக் குறித்துப் பேசுகிறது. ஆம்/இல்லை
2. சபை என்பது கத்தோலிக்கமே. ஆம்/இல்லை
3. பெரும்பான்மையான மக்கள், சபையை முறையாகப் புரிந்து கொள்கின்றனர். ஆம்/இல்லை.
4. சபை என்ற பதம் வேதாகமத்தில் ஒரே ஒரு விதத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆம்/இல்லை.
5. தமது சபைகளைக் கட்டுவதாக கிறிஸ்து கூறினார். ஆம்/இல்லை
6. ஆசியாவிலுள்ள ஏழு சபைகள் என்பது ஏழு வித்தியாசப்பட்ட நாமகரணக் கூட்டங்களைக் குறிக்கிறது. ஆம்/இல்லை.
7. சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. ஆம்/இல்லை.
8. ஒரே சரீரம் மட்டும் உண்டு. ஆம்/இல்லை
9. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார். ஆம்/இல்லை
10. இராஜ்யம் இனிமேல் வரவேண்டியதாயுள்ளது. ஆம்/இல்லை

**தயவுசெய்து சரியான பதிலைக் குறிப்பிடுக.**

1. சபை என்றால் எது இல்லை என்று வரிசைப்படுத்துக.

2. சபை என்ற பதத்தை விளக்கப்படுத்த, கிரேக்க மொழியிலிருந்து வருகின்ற வார்த்தை என்ன?

3. சபை என்பது யாரை உள்ளடக்கியது ?

4. சபை என்னும் பதம் எந்த இரண்டு விதத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது?

5. தன் சபையைக் கட்டுவதாக யார் சொன்னது ?

6. அவர் எத்தனை சபைகளைக் கட்டினார் ?

7. ஆசியாவிலிருந்த ஏழு சபைகள் யாவை ?

8. இயேசுவிற்கு எத்தனை சரீரங்கள் உள்ளன ?

9. இராஜாதி இராஜா யார் ?

10. கர்த்தருடைய திராட்சைத்தோட்டத்தில் நாம் என்ன செய்ய வேண்டியவர்கள் ?

**தயவுசெய்து பின்வருவனவற்றிற்கு சுருக்கக் குறிப்பு வரைக.**

1. எக்லீசியா ..........................................................................................

2. கிறிஸ்துவின் சரீரம் ..........................................................................

3. தேவனுடைய வீடு ..............................................................................

4. தேவனுடைய இராஜ்யம் ......................................................................

5. கர்த்தருடைய திராட்சத் தோட்டம் ........................................................

## பாடம் 2 – கேள்விகள்

**தயவுசெய்து சரியான பதிலைக் கொடுக்கவும் :**

1. சபை முதலாவதாக எங்கே இருந்தது ?

2. தேவன் எப்போது சபையைத் தேர்ந்தெடுத்தார் ?

3. இராஜ்யத்தின் ( இறை அரசின் ) வருகையை முன்னறிவித்த மூன்று தீர்க்கதரிசிகளைக் குறிப்பிடுக?

4. இராஜ்யம் (இறை அரசு) எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் ?

5. சபையை நிறுவுவதாக வாக்குத்தத்தம் செய்தது யார் ?

6. அவர், யாருடைய சபையை நிறுவுவதாக வாக்குத்தத்தம் செய்தார் ?

7. கிறிஸ்து எத்தனை சபைகளைக் கட்டுவதாகச் சொன்னார் ?

8. சபை எதனுடன் வருவதாக இருந்தது ?

9. எருசலேமில் என்ன பிரசங்கிக்கப்படும் என்று கூறப்பட்டது ?

10. சபையின் நிறுவுதல் குறித்து எங்கே வாசிக்கிறோம்?

**தயவுசெய்து சரி அல்லது தவறு என்று குறிப்பிடுக.**

1. சபை திட்டமிடப்பட்டு, தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு, வாக்குத்தத்தம் செய்யப்பட்டு, பிறகு நிறுவப்பட்டது. சரி/தவறு

2. சபையைக் குறித்த எண்ணம் தேவனுடைய மனதிலே உதயமாயிற்று. சரி/தவறு

3. இறையரசு (இராஜ்யம்) சமீபித்திருப்பதாக யோவான் கூறினார். சரி/தவறு

4. இறையாட்சி (இராஜ்யம்) பலத்தோடே வந்தது. சரி/தவறு

5. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் அவருடைய நாமத்திலே சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும். சரி/தவறு

6. சபை எருசலேமிலே ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது. சரி/தவறு

7. அப்போஸ்தலர் 2-ம் அதிகாரம், சபையின் நிறுவுதல் பற்றிக் கூறுகிறது. சரி/தவறு

8. இது ரோம அரசர்களின் காலத்தில் சம்பவிக்க வேண்டியிருந்தது. சரி/தவறு

9. கடைசி நாட்கள் என்பது ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. சரி/தவறு

10 தீர்க்கதரிசனங்களும், வாக்குத்தத்தங்களும் நிறைவேறி விட்டன. சரி /தவறு

**தயவுசெய்து பூர்த்தி செய்யுங்கள்:**

1. "அவர் ............. கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே"

2. ".................. கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் ஸ்தாபிக்கப்படும்".

3. "என்றென்றைக்கும் ........................... இராஜ்யத்தை (இறையரசை) பரலோகத்தின் தேவன் ஸ்தாபித்தார்."

4. "நான் என் ................................ கட்டுவேன் ".

5. "மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் ................................. தொடங்கி சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டியது".

## பாடம் 3 – கேள்விகள்

**தயவு செய்து பின்வருவனவற்றை சொன்னது யார் எனக் குறிப்பிடுக :**

1. தனது சபையைக் கட்டுவதாக சொன்னது யார் ?

2. "கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" என்று சொன்னது யார் ?

3. "நீர் என் வலது பாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார்" என்று சொன்னது யார் ?

4. "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னது யார் ?

5. "இந்த மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னது யார் ?

**தயவு செய்து பின்வருவனவற்றைக் குறித்து குறிப்பிடப்பட்ட தீர்க்கதரிசன வசனத்தைக் குறிப்பிடுக :**

1. கர்த்தருடைய அரசாட்சி எப்பொழுது ஸ்தாபிக்கப்படும் ?

2. எந்தப் பட்டணத்தில் அது ஸ்தாபிக்கப்படும் ?

3. எத்தனை தேசத்தார் அதற்குள் வருவார்கள் ?

4. கர்த்தருடைய இராஜ்யம் எதோடே வரும் ?

5. எவ்வளவு காலத்திற்கு அது நிலைத்திருக்கும் ?

**தயவுசெய்து குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களைக் குறிப்பிடுக :**

1. சபையை யார் கட்டுவார் ?

2. சபை எதனோடே வரும் ?

3. அங்கே என்ன பிரசங்கிக்கப்படும் ?

4. எத்தனை தேசங்களுக்கு அது பிரசங்கிக்கப்படும்?

5. யாருடைய நாமத்திலே இவை பிரசங்கிக்கப்படும் ?

**தயவு செய்து அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்திலிருந்து கேள்விகளுக்கு பதில் கொடுக்கவும் :**

1. பரிசுத்த ஆவியைப் பெற்றது யார் ?

2. அதற்கான அடையாளங்கள் யாவை ?

3. இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஜனங்கள் ஏற்றுக்கொள்ள பேதுரு என்ன செய்தார் ?

4. ஜனங்கள் கேட்ட கேள்வி என்ன? அதற்கு கொடுக்கப்பட்ட பதில் என்ன?

5. இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்த்தது யார் ?

**தயவுசெய்து விளக்கப்படுத்துக :**

1. சபை ..............................................................................................

2. தீர்க்கதரிசனம் ..............................................................................

3. பெந்தகோஸ்தே நாள் ..............................................................................

4. மனந்திரும்புதல் ....................................................................................

5. ஞானஸ்நானம் (திருமுழுக்கு) ...........................................................

## பாடம் 4 – கேள்விகள்

**சரியான பதிலைக் கொடுக்கவும் :**

1. வெகு நாட்களுக்கு முன் காணாமல் போன உங்கள் சிநேகிதனை நீங்கள் எப்படி அடையாளப்படுத்துவீர்கள் (கண்டுபிடிப்பீர்கள்)?

2. இன்று அநேக நாமகர்ண சபைகள் உலகில் உள்ளனவா ?

3. எந்த சபை சரியானதென்று ஒருவர் எப்படி அடையாளம் கண்டுகொள்ளக்கூடும்?

4. சபையைக் குறித்த அடையாளங்கள் எங்கே காணப்படுகின்றன ?

5. சபையை நிறுவியது யார் ?

6. சபை எங்கே ஆரம்பிக்கப்பட்டது ?

7. எப்பொழுது சபை நிறுவப்பட்டது ?

8. சபையின் பெயர்களைக் குறிப்பிடுக?

9. சரீரம் என்றால் என்ன ?

10. அதன் அங்கத்தினர்கள் என்னவென்று அழைக்கப்பட்டனர் ?

11. சபையின் தலைவர் யார் ?

12. வேதாகமத்தின்படி எத்தனை சபைகள் உள்ளன ?

13. சபையில் நுழைவதற்கான வரைமுறைகள் யாவை ?

14. ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாகவும், சபைக்குள்ளாகவும் எப்படி நுழைய முடியும்?

15. சபையின் ஆராதனை / தொழுகையில் உள்ள செயல்களை வரிசைப்படுத்துக.

அ.

ஆ.

இ.

ஈ

உ.

16. சபையின் உபதேசக் கோட்பாடுகள் எது?

17. ஒவ்வொரு பகுதி (தனி) சபையிலும் இருக்க வேண்டியவர்கள் யார் ?

18. சபையின் மூவகை ஊழியங்கள் யாவை ?

19. கிறிஸ்தவன் எப்படிப்பட்ட ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும் ?

20. ஜீவ கிரீடத்தை யார் பெறக் கூடும் ?

21. ஒரு மனிதன் ஒரு சபையை நிறுவியிருந்தால், அது கர்த்தருடைய சபையாகுமா ?

22. ஒரு சபை எருசலேமில் துவங்கப்படாதிருந்தால், அது கர்த்தருடைய சபையாகுமா ?

23.கி.பி.33-க்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சபை, கர்த்தருடைய சபையாகுமா?

24.ஒரு சபையின் அங்கத்தினர்கள் "கிறிஸ்தவர்கள்" என்ற பெயரைத் தரித்துக் கொள்ளாதிருந்தால், அது கர்த்தருடைய சபையாகுமா ?

25.நீங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால், கிறிஸ்து உங்களை எந்த சபையில் சேர்த்துக் கொள்கிறார்?

## பாடம் 5 - கேள்விகள்

**தயவுசெய்து சரியான வார்த்தைகளால் பூர்த்தி செய்க :**

1. சபைக்கு வசன ரீதியான ................. இருக்க வேண்டும்.

2. மனிதனால் உருவாக்கப்பட்ட பெயர்களும் பட்டங்களும் ..............

3. ...................வின் ஜெபம், .........................த்திற்காக வேண்டக் கூடியதாயிருந்தது.

4. நீங்களே கிறிஸ்துவின் ........................

5. தேவன் தமது ஜனங்களுக்கு ஒரு .......................... க் கொடுப்பார்.

**தயவுசெய்து 'ஆம்' அல்லது 'இல்லை' என்று எழுதுக :**

1. சபை வசனரீதியாக அமைய வேண்டுமானால், வசனரீதியான பெயரையும் தரித்துக்கொள்ளவேண்டுமா ?

2. மனிதனால் கொடுக்கப்படும் பெயர்களும், பட்டங்களும் தவறானவையா ?

3. இரட்சிப்பு கிறிஸ்துவின் நாமத்தில் மட்டும்தான் உண்டா ?

4. நாம் எல்லோரும் ஒரே நாமத்தை மட்டுமே தரித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறாரா?

5. தமது நாமத்தைத் தரிக்காமலேயே, ஒருவர் கர்த்தரை மகிமைப்படுத்தக்கூடுமா ?

**தயவுசெய்து சரியான பதிலைக் கொடுக்கவும் :**

1. மனிதனால் கொடுக்கப்பட்ட சில பெயர்கள் எப்படி உருவாயின ?

2. மனிதனால் கொடுக்கப்பட்ட பெயர்களும், பட்டங்களும் ஏன் தவறானவை என வரிசைப்படுத்துக ?

3. கிறிஸ்து எதற்காக ஜெபித்தார் ?

4. தமது சகோதரர்கள் பிரிவினைக் குழுக்களாக இருந்ததை பவுல் அறிந்தபோது, பவுல் செய்தது என்ன ?

5. சபை ஏன் கிறிஸ்துவின் பெயரை (நாமத்தை) தரித்துக் கொள்ள வேண்டும்?

6. ரோமர்: 16:16-ஐ மனப்பாடமாக எழுதுக?

7. 1கொரி 12:27-ல் காணும் கிறிஸ்துவின் சரீரம் என்பது என்ன?

8. சபையின் வேறு சில பெயர்களைக் குறிப்பிடுக?

9. சபை கிறிஸ்துவுக்குரிய (கிறிஸ்துவின்) சபையாக இராவிட்டால், பிறகு அது யாருடைய சபையாக இருக்கக்கூடும்?

10. சபையின் அங்கத்தினர்கள் என்னவென்று அழைக்கப்பட்டனர்?

11. ''கிறிஸ்தவர்'' என்னும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வசனப்பகுதிகளைக் குறிப்பிடுக.?

12. இன்றைக்கு நாம் எப்படிப்பட்ட பெயரில் அழைக்கப்பட வேண்டும் என கர்த்தர் எதிர்பார்க்கிறார்?

13. ஏதோ ஒரு புனைப் பெயருடன் கூடிய கிறிஸ்தவர் என்று நம்மை அழைத்துக் கொள்வது சாத்தியமா?

14. நாம் ஏன் கிறிஸ்துவின் நாமத்தை உயர்த்த வேண்டும்?

15. கிறிஸ்துவின் நாமத்தில் நாம் செய்ய வேண்டியது என்னென்ன?

## பாடம் 6 – கேள்விகள்

**தயவுசெய்து பின்வருவனவற்றிற்கு சரியான பதிலைக் கொடுக்கவும் :**

1. சபையைக் கட்டியது யார் ?

2. சபை எதினால் கட்டப்பட்டது ?

3. கிறிஸ்துவின் சரீரம் மாம்சத்திற்குரியதா ? ஆவிக்குரியதா ?

4. எத்தனை சபைகள் உள்ளன ?

5. ஒரே சபை என்பது .......................... ரீதியில் பேசப்படுகிறது.

6. சபை நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தனிப்பட்ட ................ கொண்டுள்ளது.

7. சபையின் ஆளுகை அமைப்பு பிராந்தியங்கள் வாரியாகவோ, தேசிய ரீதியாகவோ அல்லது அகில உலக ரீதியாகவோ, எப்படி அமைவு பெற்றது ?

8. கர்த்தருடைய சபைக்கு பூமியில் தலைவரோ, தலைமையகமோ உண்டா ?

9. சபைக்குத் தலைவர் யார் ?

10. பிராந்திய சபையின் முன்னோடிகள் (நடத்துனர்கள்) என்னவென்று அழைக்கப்பட்டனர் ?

11. மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் சேவை என்ன ?

12. ஒவ்வொரு பிராந்திய சபையிலும் எத்தனை மூப்பர்களும், உதவிக்காரர்களும் இருக்கவேண்டும் ?

13. மூப்பர்கள் வேறு என்ன பெயரில் அழைக்கப்பட்டனர் ?

14. மூப்பர்களின் தகுதியாம்சங்கள் எங்கே பட்டியலிடப்பட்டுள்ளது ?

15. உதவிக்காரர்களின் தகுதியாம்சங்கள் எங்கே பட்டியலிடப்பட்டுள்ளன?

16. தகுதி பெற்ற அங்கத்தினர்கள் ஒரு பிராந்திய சபையில் இல்லாமலிருந்தாலும், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களை நியமிக்கலாமா ?

17. மேற்கண்ட நிலையில், யார் சபையை நடத்த வேண்டும் ?

18. பிராந்திய சபைகள் எந்த ரீதியில் ஒருங்கிணைந்துள்ளன ?

19. தேவனுடைய ஆளுகை அமைப்புக்கு மேல் எதையும் மேம்படுத்தலாமா ?

20.வசனத்தின்படி பேதுரு சபைக்கு தலைவராக இருந்தாரா ?

21. பிஷப் என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஒரு மனிதன், அநேக பிராந்திய சபைகளுக்கு மேலான அதிகாரியாக இருந்ததாக வேதத்தில் வாசிக்கின்றோமா?

22.ஒரு பிராந்திய சபைக்கு தலைவராக, பாஸ்டர் என்பவர் செயல்பட்டதாக வாசிக்கிறோமா?

23. மத குருமார்களென்றும், சபை அறிவு பெறாத போது மக்களென்றும் கூறப்படும் பிரிவு குறித்து வாசிக்கிறோமா ?

24.இன்று உலகில் அநேக பிரிவினைகள் இருப்பதற்குக் காரணம் என்ன?

25.சபையின் ஆளுகை அமைப்பை முறைப்படி அறிய, நாம் எங்கே திரும்ப வேண்டும் ?

## பாடம் 7 - கேள்விகள்

**சரியான பதில் கொடுக்கவும் :**

1. சபையைப் பற்றிய நம்முடைய பாடத்தில் நாம் என்ன படித்தோம் ?

2. சபைக்காக யார் மரித்தது ?

3. சபை எதினால் விலைக்கு வாங்கப்பட்டது ?

4. சபையினுடைய இரட்சகர் யார் ?

5. சபை முக்கியம் என்பது நமக்கு எப்படித் தெரியும் ?

6. சபை முக்கியமில்லை என சிலர் ஏன் கூறுகின்றனர் ?

7. சபை ஒருவரை இரட்சிக்குமா ?

8. இரட்சிக்கும்படி ஒருவர் சபையின் ஒரு அங்கமாயிருக்க வேண்டுமா ?

9. வெள்ளத்திலிருந்து தப்பும்படி நோவாவும் அவர் குடும்பத்தாரும், எதில் இருக்க வேண்டியிருந்தது ?

10. அங்கே, பேழைக்கு வெளியே ஏதும் இரட்சிப்பு (காப்பாற்றப்படுதல்) இருந்ததா ?

11. இரட்சிக்கப்படுகிறவர்களை யார் சபைக்குள் சேர்த்தது ?

12. இதைப் பற்றி சொல்லும் வசனப் பகுதியை எழுதவும் ?

13. ஒருவர் வேத வசனத்தின்படி இரட்சிக்கப்பட்டால், அவர் தானாகவே எந்த சபையில் அங்கமாகிறார் ?

14. கர்த்தருடைய சபையில் ஒருவர் சேர்ந்து கொள்ள இயலுமா ?

15. சபைக்குள் பிரவேசிக்கத் தேவையான ஐந்து படிகள் யாவை ?

16. மேலே குறித்த இந்தக் கற்பனைக்ளுக்கு கீழ்ப்படியாமலேயே ஒருவர் இரட்சிக்கப்படக்கூடுமா ?

17. திருமுழுக்கு (ஞானஸ்நானம்) என்றால் என்ன ?

18. திருமுழுக்கின் (ஞானஸ்நானம்) நோக்கம் என்ன ?

19. இராஜ்யம் (அரசாட்சி ) என்பது என்ன ?

20. இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க ஏதுவான ஒரே வழி என்ன ?

21. வேதாகமத்தின்படி சரீரம் என்பது என்ன ?

22. எத்தனை சரீரங்கள் உள்ளன ?

23. அதற்குள் ஒருவர் எப்படி பிரவேசிக்க இயலும் ?

24. இரட்சிக்கப்பட எத்தனை படிகள் உள்ளன ?

25. சபைக்குள் பிரவேசிக்கத் தேவையான எத்தனை வழிகள் உள்ளன ?

## பாடம் 8 – கேள்விகள்

**சரியான பதில் கொடுக்கவும் :**

1. சபை எதினால் உருவானது ?

2. சபையின் நோக்கமென்ன ?

3. கர்த்தருடைய நாமத்திலே என்ன செய்யப்பட வேண்டும் ?

4. புதிய ஏற்பாட்டில், எத்தனை வகை தொழுகைகள் உண்டு என நாம் வாசிக்கிறோம் ?

5. அநேக விக்கிரகத் தோப்புகளையும், மேடைகளையும் பவுல் எங்கே கண்டார் ?

6. அவர்களுடைய தொழுகையைக் குறித்துப் பவுல் குறிப்பிட்டது என்ன ?

7. இன்றைக்கும் அப்படிப்பட்ட தொழுகையை செய்கிற மக்கள் உள்ளனரா ?

8. தேவனை வீணாக ஆராதிக்கிறவர்கள் என, அவர்களைக் குறித்துப் பேசினது யார்?

9. அவர்களுடைய தொழுகை ஏன் வீணானதாயிருந்தது?

10. அதற்குரிய வசன ஆதாரம் கொடுக்கவும்.

11. கர்த்தரை வீணாய் தொழுகிற ஒரு மக்கள் கூட்டம் இன்றைக்கும் உள்ளதா?

12. உண்மையுள்ள தொழுகை என்பது என்ன?

13. யோவான் 4:24-ஐ மனப்பாடமாக எழுதுக.

14. தேவனை ஆவியோடு தொழுது கொள்ளுதல் என்பதன் பொருள் என்ன?

15. தேவனை உண்மையோடு தொழுது கொள்ளுதல் என்பதன் பொருள் என்ன ?

16. தேவன் தனது ஜனங்களிடத்தில் எப்படிப்பட்ட தொழுகையை எதிர்பார்க்கிறார் ?

17. தேவனுடைய மக்கள், தொழுதுகொள்ள வேண்டிய வழிமுறைகளை நாம் எங்கே வாசிக்கிறோம் ?

18. தொழுகையின் ஐந்து பாகங்களைக் குறிப்பிடுக ?

19. தேவன் இன்று மனிதனிடத்தில் எப்படி பேசுகிறார் ?

20. தேவனுடைய மக்கள் அவரிடத்தில் எப்படி பேசுகின்றனர் ?

21. எத்தனை வகை இசைகள் உள்ளன ?

22.தேவன் எப்படிப்பட்ட இசையை விரும்புகிறார் ?

23.கர்த்தருடைய பந்தி என்பது என்ன ?

24.கிறிஸ்தவர்கள் வாரத்தின் எந்த நாளிலே கூடி வந்தார்கள் ?

25.தொழுகைக்கான தேவனுடைய திட்டத்தில் ஏதேனும் கூட்டவோ, குறைக்கவோ முடியுமா ?

## பாடம் 9 – கேள்விகள்

**தயவுசெய்து சரியான பதிலைக் கொடுக்கவும் :**

1. கர்த்தருடைய சபை எப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடக்கூடாது ?

2. கிறிஸ்தவ மார்க்க உலகம், லாப நோக்குடைய வித்தியாசப்பட்ட வியாபாரங்களில் ஈடுபடுவது குற்றமா ?

3. சபையின் ஊழியம் (வேலை) என்ன ?

4. மத். 28:19,20-லும், மாற்கு 16:16-லும் வரும் கர்த்தருடைய கட்டளைகளைக் குறிப்பிடுக?

5. ஆதி கிறிஸ்தவர்கள் சிதறிப்போனபோது, செய்தது என்ன ?

6. அவர்கள் பிரசங்கித்த சில காரியங்கள் யாவை ?

7. விசுவாசம் எப்படி வருகிறது ?

8. எது விடுதலையாக்குகிறது ?

9. மனிதன் எப்படி இரட்சிக்கப்படக்கூடும் ?

10. யார் இழந்து போனவர்களாய் இருப்பார்கள் ?

11. தேவையுடையோருக்கு உதவ சபை அக்கறை காட்ட வேண்டுமா ?

12. எருசலேமிலிருந்த ஏழை பரிசுத்தவான்களுக்கு, யார் தர்ம பணத்தைக் கொடுத்து உதவி செய்தது ?

13. எல்லோருக்கும் உதவி செய்தல் அவசியமா ?

14. எவ்வகை மக்கள் முதலில் உதவி பெற வேண்டும்?

15. உதவி செய்தலில் உள்ள வரையறை என்ன?

16. சபைக்கு புறம்பே இருப்போருக்கும் உதவ வேண்டுமா?

17. தேவையுடையோருக்குச் செய்யும் உதவிநிதி எங்கிருந்து வரவேண்டும்?

18. பண உதவிநிதி எப்பொழுது திரட்டப்பட வேண்டும்?

19. பக்திவிருத்தி எனும் பதத்தை விளக்குக?

20. பக்தி விருத்தியை உண்டுபண்ணுகிற சில காரியங்கள் யாவை?

21. தேவன் எப்படி துதிக்கப்படவும், கனப்படுத்தப்படவும் வேண்டும் ?

22. சபைக்குத் தலைவர் யார் ?

23. சபையாற்றும் பணியின் நோக்க மென்ன ?

24. சபை உலகிற்குரியதா ?

25. அரசியல் வியாபாரம் இவற்றை சபை செய்வது எதற்கு அப்பாற்பட்டது?

## பாடம் 10 – கேள்விகள்

**தயவுசெய்து சரியான பதிலை எழுதுக :**

1. சபையின் ஐக்கியத்தைக் குறித்த வேண்டுகோள்கள் எதுவும் இன்று காணப்படுகிறதா?

2. ஐக்கியத்தில் அதிகமான அக்கறை காட்டப்படுவதன் காரணம் என்ன?

3 உபதேசங்களில் ஒத்துப்போக வேண்டுவதில்லை என்ற கொள்கையில், ஐக்கியத்தை நிலைநாட்ட முடியுமா?

4. ஐக்கியத்திற்கான பதில் என்ன ?

5. ஐக்கியத்திற்காக மனிதர்கள் செய்ய வேண்டுவதென்ன?

6. நாம் எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி ஜெபித்தது யார்?

7. ஐக்கியத்தின் விளைவு என்ன?

8. பிரிவினையை வசனம் கண்டிக்கிறதா?

9. கர்த்தர் யாரை வெறுக்கிறார்?

10. 1கொரி 1:10ஐக் குறிப்பிடவும்.

11. கொரிந்திலிருந்த சபையாருக்கு, பவுல் கேட்ட மூன்று கேள்விகள் யாவை?

12. எப்படிப்பட்ட மக்கள், சபையில் ஐக்கியத்திலிருந்து விலக்கப்பட வேண்டும்?

13. அவர்கள் யாருக்கு ஊழியம் செய்கின்றனர்?

14. நாம் அவர்களை தவிர்க்க வேண்டுமா?

15. கர்த்தரை வீணாக ஆராதிப்பது யார்?

16. கிறிஸ்து எதற்காக ஜெபித்தார்?

17. இயலாத (கூடாத) ஒரு காரியத்திற்காகவா கிறிஸ்து ஜெபித்தார்?

18. ஐக்கியத்திற்கான விதிமுறைகளைக் குறிப்பிடுக?

19. அவைகள் ஒவ்வொன்றிலும் 'எத்தனை' உள்ளன?

20 கிறிஸ்து எத்தனை சபைகள் ஸ்தாபித்தார்?

21. சபை என்பது என்ன?

22. சபையின் தலைவர் யார்?

23. கிறிஸ்துவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரீரமோ, தலையோ உண்டா?

24. கர்த்தருக்கு எத்தனை குடும்பங்கள் உள்ளன?

25. தேவனுடைய வசனம் நம்மை பிரிக்கிறதா? அல்லது ஐக்கியப்படுத்துகிறதா?

## பாடம் 11 – கேள்விகள்

**தயவுசெய்து சரியான பதில்களைக் கொடுக்கவும் :**

1. கோட்பாடு என்னும் பதத்தை விளக்கப்படுத்துக ?

2. ஒவ்வொரு (நாமகரண கூட்டத்திலும்) மனித சபைகளிலும் உள்ளவை யாவை ?

3. வசனத்துடன் ஒன்றைக் கூட்டவோ, குறைக்கவோ செய்பவர்களுக்கு என்ன சம்பவிக்கும் ?

4. வசனங்கள் முழுமையானவைகளா ?

5. நிறைவு என்பது என்ன ?

6. நாம் எப்படி பேச வேண்டும் ?

7. வேதாகமத்திற்கப்பால் இணைப்புப் புத்தகங்கள் நமக்குத் தேவையா?

8. இன்றைய மார்க்க உலகில் பிரிவினைகளுக்குக் காரணம் என்ன ?

9. வேதாகமம் நம்மைப் பிரிக்குமா ?

10. கர்த்தருடைய சபையின் கொள்கை என்ன ?

11. நமது சொந்தக் கருத்துக்களும் யோசனைகளும் பிரயோஜனமுள்ளவைகளா?

12. வேத வசனத்திற்கு நமது சுய வியாக்கியானம் அளிக்க நமக்கு உரிமை உண்டா?

13. வேதாகமத்திற்கு ஒப்பான ஒரு புத்தகத்தை எழுதக் கூடிய மனிதன் யாராகிலும் உலகில் உண்டா ?

14. ஒருவர் ஒரு புத்தகத்தை எழுதவும், அது வேதாகமத்திற்கு ஒப்பானது என்று கூறவும் யாருக்காகிலும் கர்த்தர் அதிகாரம் கொடுத்துள்ளாரா?

15. தேவனுடைய வசனம் எங்கிருந்து வந்தவை ?

16. கடைசி நாளிலே நம்மை நியாயந்தீர்ப்பது எது?

17. சத்தியம் என்பது என்ன ?

18. மனிதன் உபதேச விஷயத்தில் உதவிக்காக யாரிடத்தில் செல்கிறான்?

19. சபையைக் குறித்த சத்தியத்தை அறிய நாம் எங்கே செல்லவேண்டும்?

20.இரட்சிக்கப்பட அநேக வழிகள் உள்ளனவா ?

21. ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என வேதம் கூறுகிறது?

22.மனிதன் தொழுதுகொள்ள என்ன செய்ய வேண்டுமென, கர்த்தர் தமது வசனத்தில் வெளிப்படுத்தியுள்ளாரா?

23.வேதாகமத்தைப் புரிந்துகொள்ளக் கூடுமா?

24.எல்லோரும் வேதாகமத்தை ஒரே மாதிரியாக புரிந்து கொள்வது சாத்தியம்தானா?

25.பரலோகத்திற்குச் செல்ல ஒரே வழி யார்?

## பாடம் 12 – கேள்விகள்

**தயவுசெய்து சரியான பதிலைக் கொடுக்கவும் :**

1. கர்த்தருடைய சபையின் ஆரம்ப வரலாற்றை நாம் எங்கே காண்கிறோம் ?

2. எந்தப் பட்டணத்தில் அது தோற்றுவிக்கப்பட்டது ?

3. அப்பொழுது எத்தனை பேர் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் ?

4. நற்செய்தி வேறு எங்கே பிரசங்கிக்கப்பட்டது ?

5. பவுல் சென்ற நற்செய்தி பயணங்கள் எத்தனை ?

6. பவுல் யூதர்களுக்கு மட்டுமே பிரசங்கித்தாரா?

7. பவுலின் ஊழியத்தின் விளைவாக, எந்த இரண்டு கண்டங்களில் சபை தோற்றுவிக்கப்பட்டது ?

8. சிதறிப்போன சீஷர்கள் என்ன செய்தனர்?

9. கர்த்தருடைய சபையைத் துன்பப்படுத்தியது யார் ?

10. விசுவாசத்தினிமித்தம் கொல்லப்பட்ட அப்போஸ்தலர்கள் எத்தனை பேர் ?

11. உபத்திரவங்களிலும் சபை வளர்ந்ததா?

12. பிற்காலங்களில் என்ன சம்பவிக்கும் என்று பவுல் குறிப்பிட்டார்?

13. சபையின் மீது தாக்குதல் எப்படி ஆரம்பித்தது?

14. கி.பி. 606ல் என்ன சம்பவித்தது ?

15. கர்த்தருடைய சபைக்கு என்ன நேர்ந்தது ?

16. அடுத்த அநேக நூற்றாண்டுகள் ஏன் இருண்ட காலம் என கருதப்பட்டது ?

17. கத்தோலிக்க சபை எந்த இரு பிரிவுகளை அடைந்தது ?

18. ரோமன் கத்தோலிக்க சபையை மறுமலர்ச்சியடையச் செய்ய முயற்சித்த நபர் யார் ?

19. அதை மறுமலர்ச்சியடையச் செய்ய அவர் ஏன் முயற்சித்தார் ?

20. இவையெல்லாவற்றினின்று வெளிவந்த இயக்கம் யாது ?

21. வேதாகமத்திற்குத் திரும்புவதிலே அவர்கள் முழு வெற்றியைக் கண்டார்களா ?

22. பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் என்ன சம்பவித்தது ?

23.வேதத்திற்கு திரும்பிய அந்த மக்கள் கர்த்தருடைய சபைக்கு மாதிரியாக ஒரு புதிய சபையை தோற்றுவித்தனரா ?

24.இதே சபை உலகின் பிற பாகங்களிலும் கிறிஸ்தவர்களால் தோற்றுவிக்கப்பட்டதா ?

25. உண்மையான கிறிஸ்துவின் சபை இன்றுள்ளதா ?

## பாடம் 13 – கேள்விகள்

**தயவுசெய்து சரியான பதிலைக் கொடுக்கவும் :**

1. சபை எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது ?

2. சபை இன்று நிலைத்திருக்கிறதா ?

3. கர்த்தருடைய சபைதான் என அடையாளம் காண, நூற்றாண்டுகளினூடே நடைபெற்ற சம்பவங்களை அறிய வேண்டியது அவசியந்தானா ?

4. இராஜ்யம் எதுவரைக்கும் நிலைபெறும் என்று கர்த்தர் சொன்னார் ?

5. இராஜ்யத்தின் வித்து எது ?

6. வித்து இன்று எதைப் பிறப்பிக்கும் ?

7. நோவாவுக்கும், மோசேக்கும் தேவன் கொடுத்த கட்டளை என்ன ?

8. கர்த்தருடைய சபையின் மாதிரியை எங்கே காணுகிறோம் ?

9. கர்த்தருடைய சபையில் அச்சடையாளங்களை எங்கே காணலாம் ?

10. கர்த்தர் சபையைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறார் ?

11. ஒரே உண்மையான வேதாகமச் சபையை எப்படி நாம் அறிந்துகொள்ளக்கூடும் ?

12. இன்று கிறிஸ்துவின் சபையை நாம் எங்கே காணலாம் ?

13. இந்த சபை ஒரு பிரிவு கூட்டமா ?

14. இதற்கு பூமிக்குரிய தலைவரோ தலைமையகமோ உண்டா ?

15. சபையின் விரோதிகள் யார் ?

16. அவர்களின் கருவிகள் யாவை ?

17. காலங்களினூடே சபை வெற்றி சிறந்து வந்துள்ளதா ?

18. கிறிஸ்து எதற்காகத் திரும்ப வருகிறார் ?

19. நமது வேண்டுகோள் என்ன ?

20. கிறிஸ்தவனாவதற்கும், கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிப்பதற்கும் உள்ள படிகளை வரிசைப்படுத்துக ?

**சரி அல்லது தவறு என எழுதுக :**

1. கிறிஸ்து தோற்றுவித்த சபை இன்று நிலைத்திருக்கிறது ......................

2. ஒரே ஒரு உண்மை சபை மட்டுமே உண்டு ............................

3. அது கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்கிறது ....................

4. ஒருவர் தான் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக மாற வேண்டியது அவசியமாகும் ............................

5. கிறிஸ்து தமது சபைக்காக ஒரு நாளில் திரும்பவும் வருகிறார் .............

## உங்களைப்பற்றி....

பெயர்........................................................................................ பதிவு எண்....................................

முகவரி........................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

தேதி............................................ கையெழுத்து.............................................